தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் இடுபொருள்கள் விற்பனை மைய துவக்க விழா

பழனி அருகே ஆயக்குடியில், வேளாண் இடுபொருள்கள் விற்பனை மைய துவக்க விழா நடைபெற்றது.

பழைய ஆயக்குடி சந்தைபேட்டை அருகே, தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை வழிகாட்டுதலின்பேரில், ஆயக்குடி கொய்யா மற்றும் பழங்கள் உற்பத்தியாளர் நிறுவனத்தின் வேளாண் இடுபொருள்கள் விற்பனை மையம் துவக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு, அமைப்பின் தலைவர் பாரவேல் வரவேற்புரை வழங்கினார். திருச்சி அன்பில் தர்மலிங்கம், வேளாண்மைக் கல்லூரி முதல்வர் பாண்டியராஜன் ஆகியோர் தலைமை வகித்தனர்.

பழனி கோட்டாட்சியர் சுந்தர்ராஜ் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு மையத்தை திறந்துவைத்து பேசினார். ஆயக்குடி பேரூராட்சித் தலைவர் சுந்தரம், மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் மகேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

திண்டுக்கல் வேளாண்மை துணை இயக்குநர் தங்கசாமி, திருச்சி மகளிர் தோட்டக் கல்லூரிப் பேராசிரியர் அருள்மொழியான், திண்டுக்கல் வேளாண்மை உதவி இயக்குநர் செல்வராஜ்,

கனரா வங்கி முதன்மை மேலாளர் கோபகுமார் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினர்.

இந்த இடுபொருள்கள் விற்பனை மையத்தில், கொய்யா உள்ளிட்ட பல்வேறு வகையான பழ விவசாயிகளுக்கு வேண்டிய தரமான உரங்கள், இடுபொருள்கள்

குறைந்த விலைக்கு விற்கப்பட உள்ளது. மேலும், இந்த மையம் மூலம், பழங்கள் தரம் பிரித்து ஏற்றுமதி செய்தல், விவசாயிகளிடம் கொள்முதல் செய்தல் உள்ளிட்ட பல்வேறு செயல்பாடுகளில் விரைவில் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

துவக்க விழாவில், மையத்தின் நிர்வாக இயக்குநர் ஞானவேல், வேளாண்மை உதவி இயக்குநர் சாந்தாமணி, ஈரோடு செந்தில், பழனி உழவர்சந்தை வேளாண் அலுவலர் காளிமுத்து உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### கோழிக் கழிச்சல் நோய் தடுப்பு முகாம்

தேனி மாவட்டத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் கால்நடை பராமரிப்புத் துறை சார்பில் பிப். 16-ஆம் தேதி வரை கோழி கழிச்சல் நோய் தடுப்பு முகாம் நடைபெறுகிறது. இந்த வாய்ப்பை பயன்படுத்தி, கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கோழிகளுக்கு இலவசமாக தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்று மாவட்ட நிர்வாகம் அறிவித்துள்ளது.

### பட்டு வளர்ச்சி விரிவாக்கக் கூட்டம்

ஆண்டிபட்டி அருகே ஜக்கம்மாள் பட்டியில் பட்டு வளர்ச்சித் துறை சார்பில் விரிவாக்கக் கூட்டம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் பட்டு வளர்ச்சித் துறை உதவி இயக்குநர் ஆல்பர்ட் தலைமை வகித்து பேசியதாவது: தமிழக அரசு பட்டு வளர்ச்சித் துறைக்காக ஏராளமான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் குறிப்பிட்டு சொல்லும்படியாக தேனி மாவட்டம் மலை சார்ந்து, குளிர்ந்த காற்றுடன் பட்டு வளர்ச்சிக்கு ஏற்ற பூமியாக விளங்குகிறது. மற்ற துறைகளை காட்டிலும் இத்துறைக்கு அரசு கூடுதல் மானியங்கள் வழங்கப்படுகின்றன. நல்ல வருமானம் சம்பாதிக்க ஏற்ற தொழில், மல்பெரி நடவுக்கு ஏக்கருக்கு 10,500 மானியமும், புழு வளர்ப்பு மனைக் கூடத்துக்கு ஆகும் ரூ. 1.5 லட்சம் செலவில் 87,500 மானியமாகவும், உபகரணங்களுக்கு முழு மானியமும் வழங்குகிறது. எனவே விவசாயிகள் இத்திட்டத்தை பயன்படுத்தி வளம் பெற வேண்டும் என்றார்.கூட்டத்தில் இளநிலை ஆய்வாளர் விவேகானந்தன், விவசாயிகள் தண்டபாணி, சேகர், நாகராஜ், கணேசன், அய்யனார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கால்நடை மருத்துவ முகாம்**

ஆர் 56 ராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் சார்பில் கால்நடைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை முகாம் மாலையாபுரத்தில் நடைபெற்றது. ராஜபாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம் கால்நடை வளர்ப்பவர்களுக்கு பல்வேறு சேவைகளை செய்து வருகிறது. மாலையாபுரம் பகுதியில் சங்க கிளை எண் 12 ல் உள்ள கால்நடைகளுக்கு இலவச மருத்துவ சிகிச்சை முகாமை சங்கத் தலைவர் எம்.பி.முருகையா பாண்டியன் தலைமை வகித்து இச் சங்கம் மூலம் கால்நடை வளர்ப்போரை ஊக்குவிக்க பல்வேறு சேவைத் திட்டங்கள் செய்து வருவதைக் கூறி முகாமை துவக்கிவைத்தார்.

கால்நடை மருத்துவர் செல்வி ஜலந்தா கால்நடைகளை பரிசோதனை செய்து தேவையான சிகிச்சை மேற்கொண்டு இலவச மருந்துகளை வழங்கினார். மாலையாபுரம்,திருவள்ளுவர் நகர் பகுதியைச்சேர்ந்த ஏராளமான கால்நடை வளர்ப்போர் இதன் மூலம் பயனடைந்தனர். சங்க மேலாளர் அப்பர்சாமி இந்த மருத்துவ முகாமின் நோக்கம் குறித்து விளக்கினார். முகாம் ஏற்பாடுகளை மேற்பார்வையாளர்கள் ரவிச்சந்திரன், முருகேசன், பன்னீர்செல்வம் ஆகியோர் செய்திருந்தனர்.

**மிளகாய் பயிரில் பூக்கள் உதிர்வதைத் தடுக்க பிளானோபிக்ஸ்**

ராமநாதபுரம் மாவட்டம், நயினார்கோவில் ஒன்றியத்தில் பயிரிடப்பட்டுள்ள மிளகாய் சாகுபடியில் பூக்கும் பருவத்தில் பூ மொட்டுகளும், பூக்களும் உதிர்வதை தடுக்க பிளானோபிக்ஸ் எனப்படும் பயிர் வளர்ச்சி ஊக்கி மருந்தை பயன்படுத்த வேண்டும் என தோட்டக் கலை உதவி இயக்குநர் எஸ். ஆறுமுகம் புதன்கிழமை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியது: நயினார்கோவில் ஒன்றியத்தில் இந்த ஆண்டு 1,550 ஹெக்டர் பரப்பளவில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது மிளகாய் பயிர் பூக்கும் பருவத்தில் உள்ளது.

இந்த சமயத்தில் பூ மொட்டுகளும், பூக்களும் சில இடங்களில் பிஞ்சுகளும் உதிர்வதால் மகசூல் இழப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகியுள்ளது.

இதனைத் தவிர்க்க பயிர் முளைத்த 90 மற்றும் 120-ஆம் நாள்களில் பிளானோபிக்ஸ் எனப்படும் பயிர் வளர்ச்சி ஊக்கி மருந்தை 4.5 லிட்டர் தண்ணீருக்கு ஒரு மில்லி வீதம் கலந்து கைத் தெளிப்பான் மூலம் மாலை வேலையில் தெளிக்க வேண்டும். பயிர் வளர்ச்சி ஊக்கி மருந்துடன் கலக்கும் நீர் உப்பு நீராக இருத்தல் கூடாது.

இந்த மருந்தை தெளிக்கும்போது நிலம் போதுமான ஈரப்பதத்துடன் இருக்க வேண்டும்.

இவ்வாறு பயிர் வளர்ச்சி ஊக்கி தெளிப்பதன் மூலம் பூ, பிஞ்சு உதிர்வதைக் கட்டுப்படுத்துவதோடு, அதிக அளவு பூக்கள் உருவாக வழி ஏற்படும். மிளகாய் சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தங்கள் பயிருக்கு பிளானோபிக்ஸ் தெளித்து அதிக மகசூல் பெற வேண்டும் என அவர் தெரிவித்தார்.

**உடுமலையில் தர்பூசணி விற்பனை தீவிரம்**

இந்த ஆண்டு வழக்கத்தைவிட கோடைக்காலம் முன்னரே தொடங்கிவிட்டதன் அறிகுறியாக, உடுமலையில் தர்பூசணி விற்பனை சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது.

சுட்டெரிக்கும் வெயில் பிப்ரவரி முதல்வாரமே அடிக்கத் தொடங்கி விட்டதால், உடுமலையில் ஆங்காங்கே ஏராளமான தர்பூசணிக் கடைகள் உருவாகி வருகின்றன. இந்நிலையில் குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஏதாவது ஒரு சாலையோரக் கடைக்குள் சென்று தர்பூசணியை சுவைக்கத் தொடங்கிவிட்டனர்.

ஆண்டுதோறும் உடுமலை வட்டத்தில் சுமார் 5 ஆயிரம் ஏக்கர்களுக்கு மேல் தர்பூசணி பயிரிடப்படுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு, வறட்சி காரணமாக குறைந்த அளவே விவசாயிகள் தர்பூசணி பயிரிட்டிருந்தனர். இதனால் தற்போது வியாபாரிகளுக்கு வெளியூரில் கொள்முதல் செய்யும் நிலை ஏற்பட்டு வருகிறது. பொதுவாக ஆண்டுதோறும் திருவண்ணாமலை, பண்ருட்டி, கடலூர், மாவட்டங்களில் பயிரிடப்படும் தர்பூசணி தென்மாநிலங்கள் முழுவதும் விற்பனைக்குச் செல்லும். அங்கிருந்து வரும் வீரியரக தர்பூசணியில் அதிக ருசியும்,

நல்ல எடையும் கிடைப்பதால், மக்கள் மகிழ்ச்சியுடன் சுவைக்கத் தொடங்கி விட்டனர்.

இதுகுறித்து உடுமலை தர்பூசணி விவசாயிகள் சிலர் கூறுகையில், ""75 நாள் பயிரான வீரியரக தர்பூசணி, இந்த ஆண்டு வறட்சி காரணமாக உடுமலை வட்டத்தில் சுமார் 2,000 ஏக்கரில் மட்டுமே பயிரிடப்பட்டிருந்தது. விலை கூடிவரும் நிலையில் உடுமலையில் தர்பூசணி விளைச்சல் குறைவாக இருப்பதால் பெருத்த ஏமாற்றமாக உள்ளது'' என்றனர்.

**குண்டடம் மாட்டுச்சந்தையில் ரூ. 2 கோடி வர்த்தகம்**

தாராபுரம் அருகே குண்டடத்தில் சனிக்கிழமை நடைபெற்ற மாட்டுச்சந்தையில் ரூ. 2 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றது.

குண்டடம் மாட்டுச் சந்தை கோமாரி நோய் தாக்குதல் காரணமாக கடந்த 2 மாதங்களாக மூடப்பட்டிருந்தது. இந்நிலையில் சனிக்கிழமை சந்தை திறக்கப்பட்டதும் வேன் மற்றும் லாரிகளில் ஏற்றிவைக்கப்பட்டு நீண்ட வரிசையில் காத்திருந்த 2 மாடுகள் விற்பனைக்குக் குவிந்தன. விற்பனைக்கு வந்திருந்த பெரும்பாலான மாடுகள் வறட்சியால் தீவனமின்றி மெலிந்து காணப்பட்டன.

இதனால் வளர்ப்புக்காக மாடு வாங்க வந்த வெளியூர் விவசாயிகள் பெரிதும் ஏமாற்றமடைந்தனர். சந்தையில் ரூ. 17 ஆயிரம் மதிப்புள்ள மாடு ரூ. 10 ஆயிரம், ரூ. 10 ஆயிரம் மதிப்புள்ள மாடு ரூ. 5 ஆயிரம் என மிகக் குறைந்த விலைக்கே விற்பனையானது.  மொத்தம் ரூ. 2 கோடிக்கு வர்த்தகம் நடைபெற்றுள்ளது.

இதுகுறித்து கட்சி சார்பற்ற தமிழக விவசாயிகள் சங்கத்தின் திருப்பூர் மாவட்டத் தலைவர் ஏ.காளிமுத்து கூறியது:

தாராபுரம், உடுமலை வட்டாரப் பகுதிகளில் பருவமழை பொய்த்ததால் பல கிராமங்களில் கால்நடைகளுக்குத் தண்ணீரும், பசுந்தீவனமும் கிடைப்பதில்லை. மனிதர்களுக்கே வாழ்வாதாரம் கேள்விக்குறியாகிவிட்ட நிலையில் கால்நடைகளை வளர்ப்பது இயலாததாகி விட்டது.

இதை சாதகமாகப் பயன்படுத்தும் வியாபாரிகள், கால்நடைகளை குறைந்த விலைக்கே கேட்கின்றனர். விலை கட்டுபடியாகாததால், கால்நடைகளை திரும்பக் கொண்டு சென்றாலும் தீவனமின்றி இறக்க நேரிடும். எனவே விலையைக் கருதாமல் விற்றுச் செல்கின்றனர் என்றார்.

இதுகுறித்து கேரள மாநிலத்தைச் சேர்ந்த வியாபாரி அப்பாஸ் கூறுகையில், ""கோமாரி நோயின் தாக்கம் குறைந்துவிட்டாலும், கேரளத்தில் இறைச்சி நுகர்வோரின் அச்சம் நீங்கவில்லை. இதனால் மாட்டிறைச்சி விற்பனை மந்தநிலையில் உள்ளது. தேவை குறைவாக உள்ளதால், மாடுகளுக்கு கூடுதல் விலை கொடுத்தால் வியாபாரிகள் நஷ்டத்தைச் சந்திக்க நேரிடும்'' என்றார்.

### பவானிசாகர் நீர்மட்டம்

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் சனிக்கிழமை நிலவரப்படி 42.14 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 532 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் 700 கனஅடி நீர் திறக்கப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 2.8 டி.எம்.சி.

### விவசாயிகளுக்கு நடவு முறையில் துவரை சாகுபடி பயிற்சி

சேத்துப்பட்டை அடுத்த கொம்மனந்தல் கிராமத்தில் வேளாண்மைத் துறை சார்பில் நடவு முறையில் துவரை சாகுபடி பயிற்சி சனிக்கிழமை நடைபெற்றது.

சேத்துப்பட்டை அடுத்த கொம்மனந்தல் கிராமத்தில் வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு நடவு முறையில் துவரை சாகுபடி பயிற்சி அளிக்கப்பட்டது. இந்தப் பயிற்சிக்கு வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் அகிலாதேவி வரவேற்றார். இப்பயிற்சிக் கூட்டத்தில் மாவட்ட வேளாண்மைத் துணை இயக்குநர் கிருஷ்ணகுமார் கலந்துகொண்டு நவீன வேளாண்மை சாகுபடி முறைகளும், அதற்காக வேளாண்மைத் துறையில் வழங்கப்படும் மானியம் பற்றியும் விளக்கிக் கூறினார். மேலும் வேளாண்மை

உதவி இயக்குநர் வடமலை கூறும்போது, நடவு முறையில் துவரை சாகுபடி விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூ.7500 மானியமாகவும், சொட்டு நீர்ப்பாசன முறையில் துவரை சாகுபடி விவசாயிகளுக்கு ஒரு லட்சம் சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியம் வழங்கப்படும் எனவும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியத்தில் 20 ஹெக்டர் பரப்பளவுக்கு அமைத்துத் தரப்படும் எனவும் தெரிவித்தார். மேலும் ஒருங்கிணைந்த உரம், பயிர் பாதுகாப்பு பற்றி தெரிவிக்கப்பட்டது.

உதவிவேளாண்மை அலுவலர்கள் அசோக்குமார், கார்த்திகேயன், சதீஷ்குமார், அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர் சரவணன், கொம்மனந்தல் பகுதியைச் சேர்ந்த 120 விவசாயிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஒருங்கிணைந்த விவசாய கையேடுகளை மாவட்ட வேளாண்மைத் துணை இயக்குநர் கிருஷ்ணகுமார் விவசாயிகளுக்கு வழங்கினார்.

### சொட்டுநீர்ப் பாசன முறைகள் கருத்தரங்கம்

திருவண்ணாமலை ஸ்ரீராஜலட்சுமி பாலிடெக்னிக் கல்லூரியில், சொட்டு நீர்ப் பாசன முறைகள் குறித்த சிறப்புக் கருத்தரங்கம் நடைபெற்றது.

மத்திய அரசின் வேளாண் சிகிச்சை மற்றும் வேளாண் வணிகப் பயிற்சி மையம், ஸ்ரீராஜலட்சுமி பாலிடெக்னிக் கல்லூரி இணைந்து நடத்திய இக்கருத்தரங்குக்கு, சொட்டு நீர்ப்பாசன நிறுவனத்தின் துணைத் தலைவர் பி.ஆர்.பாலசுப்பிரமணியன் தலைமை வகித்தார். தோட்டக் கலைத்துறை துணை இயக்குநர் ஜெகன்நாதன் கலந்து கொண்டு பேசினார்.

ராஜலட்சுமி பாலிடெக்னிக் கல்லூரித் தலைவர் எஸ்.கோவிந்தசாமி, திருவண்ணாமலை கார்ப்பொரேஷன் வங்கி மேலாளர் பிரம்மகுமார், கிரீன்டெக் பெர்டிலைசர்ஸ் கார்ப்பரேஷன் இயக்குநர் சி.எஸ்.துரை, குப்பநத்தம் ஊராட்சித் தலைவர் ஜெயப்பிரகாஷ், சு.பாப்பாம்பாடி ஊராட்சித் தலைவர் குமார் மற்றும் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

**வருகிற 4ஆம் தேதி முதல் பால் உற்பத்தி நிறுத்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு கிடையாது என தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் அமைப்பு அறிவித்துள்ளது.**

வருகிற 4ஆம் தேதி முதல் பால் உற்பத்தி நிறுத்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு கிடையாது என தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்க பணியாளர்கள் அமைப்பு அறிவித்துள்ளது.

தருமபுரி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பொதுக்குழு கூட்டம் சங்க அலுவலகத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு தலைவர் கே.கோவிந்தசாமி தலைமை வகித்தார். பொருளாளர் எம்.நாகராஜன் முன்னிலை வகித்தார். வருகிற 4ஆம் தேதி முதல் பால் உற்பத்தி நிறுத்தப் போராட்டம், கால்நடைகளுடன் சாலை மறியல் போராட்டம் நடைபெற இருப்பதாக அறிகிறோம்.

இந்தப் போராட்டத்துக்கு ஒத்துழைப்பு கிடையாது. பணியாளர்கள் அனைவரும் விடுமுறை எடுக்காமல் பணியாற்ற வேண்டும்.

தமிழகம் முழுவதிலும் பணியாற்றும் சங்கப் பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு, பணி நிரந்தரம், போனஸ் தொகை உயர்த்தி வழங்க வேண்டும்; கிராம பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்துக்கு பால் அளிக்கும் உறுப்பினர்களுக்கு ஒரு லிட்டர் பாலுக்கு அரசு நிதியிலிருந்து ஐந்து ரூபாய் ஊக்கத்தொகை அளிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**உளுந்து, பாசிப்பயறு சாகுபடி செய்ய அறிவுறுத்தல்**

உணவு தானிய இயக்கத் திட்டத்தின் கீழ், உளுந்து, பாசிப் பயிரைச் சாகுபடி செய்வதால் குறுகிய காலத்தில் கூடுதல் மகசூல் பெற முடியும் என்று வேளாண் துறை அறிவுறுத்தியது.

இதுகுறித்து கபிலர்மலை வேளாண் உதவி இயக்குநர் தங்கராஜு வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தமிழக முதல்வரின் உணவு தானிய உற்பத்தி இயக்கத் திட்டத்தின் கீழ், கோடை சாகுபடி முனைப்பு இயக்கம் நாமக்கல் மாவட்டத்தில் நடைபெற்று வருகிறது. பரமத்திவேலூர், கபிலர்மலை வட்டாரத்தில் கரும்பு, மரவள்ளி நடவுப் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவற்றுக்கு இடையே ஊடு பயிராகவும், நெல் அறுவடை செய்த பிறகு தனிப் பயிராகவும், உளுந்து, பாசிப் பயிரைச் சாகுபடி செய்து குறுகிய காலத்தில் விவசாயிகள் கூடுதல் வருவாய் பெறலாம்.

நிகழாண்டு, மழை குறைவாகப் பெய்ததாலும் நீர் நிலைகளில் தண்ணீர் குறைந்து வருவதாலும், நெல் அறுவடை செய்த வயல்களில் குறுகிய காலப் பயிராக உளுந்து, பாசிப் பயிரைச் சாகுபடி செய்து பயனடையலாம்.

தனிப் பயிராக சாகுபடி செய்ய ஏக்கருக்கு 8 கிலோ விதையும், ஊடு பயிராகச் சாகுபடி செய்ய நான்கு கிலோ விதையும் போதுமானது.

தற்போது, சாகுபடி செய்து வரும் மரவள்ளி, கரும்பில் ஊடு பயிராக உளுந்து அல்லது பாசிப் பயிரைச் சாகுபடி செய்து உபரி வருமானம் பெறலாம். ஒரு கிலோ விதைக்கு நான்கு கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது பத்து கிராம் சூடோமோனாஸ் அல்லது இரண்டு கிராம் கார்பென்டாசிம் இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் விதை நேர்த்தி செய்து விதைக்க வேண்டும்.

2 சதம் டிஏபி கரைசலை பூ பூக்க ஆரம்பிக்கும் போது ஒரு முறையும், 15 நாள்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்க வேண்டும். ஓர் ஏக்கருக்கு சராசரியாக 600 கிலோ தனிப் பயிரிலும், 250 கிலோ ஊடு பயிரிலும் மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையானச் சான்று பெற்ற விதை உளுந்து போதுமான அளவில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு கபிலர்மலை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்றார் அவர்.

**பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகை அளிப்பு**

நாகர்கோவிலில் நடைபெற்ற விழாவில், பால் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கத் தொகையாக ரூ. 6 லட்சத்திற்கான காசோலையை அமைச்சர் கே.டி. பச்சைமால் ஞாயிற்றுக்கிழமை வழங்கினார்.

நாகர்கோவில் ஆவின் பால் பண்ணையில் நடைபெற்ற விழாவுக்கு, மாவட்ட ஆட்சியர் எஸ். நாகராஜன் தலைமை வகித்தார். நாஞ்சில் ஏ. முருகேசன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். துணைப் பதிவாளர் கிருஸ்துதாஸ் வாழ்த்திப் பேசினார்.

பால் உற்பத்தியாளர்கள் 300 பேருக்கு ஊக்கத் தொகையாக ரூ. 6 லட்சத்திற்கான காசோலையையும், அதிக பால் உற்பத்தி செய்த 10 கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 85 ஆயிரத்திற்கான ஊக்கத் தொகையையும் அமைச்சர் கே.டி. பச்சைமால் வழங்கினார்.

பால்வளத் தலைவர் எஸ்.ஏ.அசோகன் வரவேற்றார். ஆவின் பொதுமேலாளர் லட்சுமண பிள்ளை நன்றி கூறினார்.

**மீன்வளம் குறைவு: தொழில் நஷ்டத்தில் சின்னமுட்டம் மீனவர்கள்தி.ராமகிருஷ்ணன்**

கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக மீன்வளம் வெகுவாக குறைந்துள்ளதால் தொழில் நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக சின்னமுட்டம் விசைப்படகு மீனவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கன்னியாகுமரியை அடுத்த சின்னமுட்டம் மீன்பிடித் துறைமுகத்தை தங்குதளமாகக் கொண்டு 275-க்கும் மேற்பட்ட விசைப்படகுகளில் மீனவர்கள் மீன்பிடித் தொழில் செய்து வருகின்றனர். அதிகாலை 5 மணிக்கு கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லும் இவர்கள் இரவு 9 மணிக்கு மேல் கரை திரும்புகின்றனர்.

இத்துறைமுகத்தின் மூலம் ஆயிரக்கணக்கானோர் நேரடியாகவும், மறைமுகமாகவும் வேலைவாய்ப்பு பெறுகின்றனர்.

சீசன் காலங்களில் பிடித்து வரப்படும் சீலா, கணவா, பாறை, வெலமீன், இரால், சாவாளை உள்ளிட்ட மீன்கள் உள்ளூர் தவிர வெளிமாநிலங்களுக்கும் அதிகமாக

ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்நிலையில் கடந்த இரு மாதங்களுக்கும் மேலாக மீன்கள் கிடைப்பது வெகுவாக குறைந்து விட்டதாக மீனவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக நாள்தோறும் 100-க்கும் குறைவான விசைப்படகுகளே தொழிலுக்கு சென்று வருவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

சின்னமுட்டத்தைச் சேர்ந்த விசைப்படகு மீனவர் செபஸ்தியான் கூறியதாவது: ஒரு விசைப்படகை இயக்க நாளொன்றுக்கு 900 லிட்டர் டீசல் தேவைப்படுகிறது. 12 முதல் 15 மீனவர்கள் வரை தொழிலுக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். சாப்பாடு மற்றும் இதர செலவுகள் என மொத்தம் ரூ. 65 ஆயிரம் முதல் ரூ. 70 ஆயிரம் வரை செலவாகிறது.

ஆனால் கடந்த சில மாதங்களாக மீன்வளம் குறைந்துள்ள நிலையில் படகு ஒன்றில் ரூ. 60 ஆயிரம் முதல் ரூ. 80 ஆயிரம் வரை மட்டுமே மீன்கள் கிடைக்கிறது. செலவுத்தொகை போக மீதம் கிடைப்பதில் 35 சதவீதம் தொழிலாளர்களுக்கு கூலியாக தரப்படுகிறது. இதில் படகு உரிமையாளருக்கு நஷ்டமே மிஞ்சுகிறது. இதனால் தொழில் மிகவும் நலிவடைந்து வருகிறது என்றார் அவர்.

கன்னியாகுமரியைச் சேர்ந்த மீனவர் அந்தோனிராஜன் கூறியதாவது: மீனவர்களுக்கு வழங்கப்பட்டு வந்த டீசல் மானியம் தற்போது வழங்கப்படவில்லை. இங்குள்ள விசைப்படகுகளின் நீளம் அதிகமாகவும், அதிக திறன் கொண்ட என்ஜின் பொருத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து அரசு வழங்கும் டீசல் மானியம் மறுக்கப்படுகிறது. பெரிய அளவிலான படகுகள் தான் தொழிலுக்கு உகந்தது என்ற நிலை உள்ளது. கிழக்கு கடற்கரைப் பகுதியில் மீன்பிடி தடைக்காலம் ஆரம்பிக்க இன்னும் 70 நாள்கள் மட்டுமே உள்ள நிலையில் அரசு விதிமுறைகளை தளர்த்தி டீசல் மானியம் வழங்கினால் மட்டுமே தொழில் நஷ்டத்தில் இருந்து மீனவர்கள் விடுபட முடியும் என்றார் அவர்.

வள்ளங்களிலும் மீன் வரத்து குறைவு: ஆரோக்கியபுரம், கோவளம், கீழமணக்குடி, வாவத்துறை உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட வள்ளங்களில்

மீனவர்கள் மீன்பிடித்து வருகின்றனர். அண்மைக்காலமாக சூறைக்காற்று பலமாக வீசி வருவதால் குறைந்த அளவிலான மீனவர்களே மீன்பிடிக்கச் செல்கின்றனர்.

இதனால் இங்கும் மீன்வரத்து குறைந்துள்ளது. கிடைக்கும் மீன்களையும் வியாபாரிகள் அதிக தொகைக்கு ஏலம் எடுத்துச் செல்வதால் குமரி மாவட்டத்தில் எப்போதும் இல்லாத அளவுக்கு மீன்களின் விலை அதிகரித்துள்ளது.

**வேகமாக குறைந்து வரும் அணைகளின் நீர்மட்டம்சு. பழனி**

கன்னியாகுமரி மாவட்ட அணைகளில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருவதால், கடைவரம்பு பகுதிகளில் உள்ள நெற்பயிர்கள் பாதிக்கப்படும் என்ற அச்சம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

குமரி மாவட்டம் முழுமையாக விவசாயத்தை நம்பி உள்ளது. ஆரம்பத்தில் சுமார் 35 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் நடைபெற்று வந்த நெல் விவசாயம், படிப்படியாக குறைந்துள்ளது. இப்போது 25 ஆயிரம் ஹெக்டேர் பரப்பில் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது.

நெல்லுக்கு உரிய விலை இல்லை என்பதால், விவசாயிகள் வாழை, தென்னை மற்றும் மலர் வகை சாகுபடிக்கு மாறி உள்ளனர். இதனால் ஆண்டுதோறும் நெல் சாகுபடி நிலங்களின் அளவு கணிசமாகக் குறைந்து வருகிறது.

இந்நிலையில் பேச்சிப்பாறை அணையில் 17.70 அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் 50.50 அடி தண்ணீரும் உள்ளது. மாவட்டத்தில் மழை இல்லாததால் அணைகளுக்கு தண்ணீர் வருவதும் குறைந்துள்ளது.

அணைகளில் இப்போதுள்ள தண்ணீரைப் பயன்படுத்தி கடைவரம்பு பகுதிகளில் உள்ள நெற்பயிர்களைக் காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் விவசாயிகளுக்கிடையே ஏற்பட்டுள்ளது.

தோவாளை, பழையாறு, புத்தனாறு, அனந்தனாறு உள்ளிட்ட கால்வாய்களின் மேல் பகுதிகளுக்கு அதிகபட்சம் 20 நாள்களுக்கு தண்ணீர் இருந்தால், நெற்பயிர் அறுவடைக்குத் தயாராகி விடும் என்கின்றனர் அப்பகுதி விவசாயிகள்.

ஆனால் அனைத்துக் கால்வாய்களிலும் கடைவரம்பு பகுதி நெல் பயிருக்கு இன்னும் 60 நாள்களுக்கு தண்ணீர் தேவை என்கின்றனர் விவசாயிகள்.

இப்போது அணைகளில் உள்ள தண்ணீரைப் பயன்படுத்தி கடைவரம்பு பகுதிகளை காப்பாற்ற முடியுமா என்ற சந்தேகம் விவசாயிகளுக்கிடையே ஏற்பட்டுள்ளது.

பேச்சிப்பாறை அணையில் இருந்து விநாடிக்கு 345 கன

அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் இருந்து விநாடிக்கு 300 கன அடி தண்ணீரும் திறக்கப்பட்டுள்ளது.

கடைவரம்புப் பகுதியில் உள்ள குளங்களில் தண்ணீர் போதுமான அளவுக்கு இருந்தாலும், நேரடிக் கால்வாய் பாசனத்தை நம்பி உள்ள நெற்பயிர்களுக்கு தண்ணீர் தொடர்ந்து தேவைப்படுகிறது.

எனவே அணைகளில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ள தண்ணீரை சிக்கனமாக கடைவரம்பு பகுதிகளுக்கு கொண்டு செல்ல வேண்டும். குறிப்பாக கால்வாய்களின் மேல் பகுதிகளுக்கு தண்ணீர் குறைவாகவே தேவைப்படுகிறது. காரணம் இங்குள்ள நெற்பயிர்கள் காயும், பொதியுமாக உள்ளன.

ஆனால் மேல்பகுதிகளில் உள்ள ஷட்டர்களை அடைத்து, தண்ணீரை கடைவரம்பு பகுதிகளுக்கு கொண்டு செல்ல முடியாத நிலையில் அனைத்து ஷட்டர்களும் பழுதடைந்து காணப்படுகின்றன. இதனால் தேவையில்லாத பகுதிகளுக்கு பழுதடைந்த ஷட்டர்கள் வழியாக தண்ணீர் வெளியேறி வருகிறது.

எனவே அணைகளில் இருக்கும் தண்ணீரை ஷிப்டு முறையில் தேவைக்கு ஏற்றவாறு கால்வாய்களில் திறந்து விடலாம் என்கின்றனர் விவசாயிகள்.

அதற்கு முன்னதாக விவசாயத் துறை மற்றும் பொதுப்பணித் துறை அதிகாரிகள் நெல் சாகுபடி நிலங்களை, விவசாயப் பிரதிநிதிகளுடன் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டால்  கடைவரம்பு நிலங்களுக்கு மேலும் தேவைப்படும் தண்ணீரின் அளவை தெரிந்து கொள்ள முடியும் என்பது அனைத்து விவசாயிகளின் கருத்தாகும்.

## தர்பூசணி வரத்து அதிகரிப்பு

தாகம் தணிக்கும் தர்பூசணி விற்பனையை கள்ளக்குறிச்சியில் கோடை காலம் தொடங்கும் முன்பே வியாபாரிகள் தொடங்கிவிட்டனர்.

எப்போதும் கோடை காலத்தில்தான் தர்பூசணி விற்பனை தொடங்குவார்கள். ஆனால் கள்ளக்குறிச்சியில் தர்பூசணி விற்பனை தற்போதே தொடங்கிவிட்டது.

பக்கத்து மாவட்டமான திருவண்ணாமலையில் பரவலாக தர்பூசணி சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அங்கிருந்து தர்பூசணிப் பழங்கள் வாகனங்கள் மூலம் இங்கு கொண்டு வரப்படுகிறது. கள்ளக்குறிச்சி அண்ணா நகரைச் சேர்ந்த வியாபாரி சர்க்கரை (40) தர்பூசணி விற்பனையை தொடங்கியுள்ளார். தர்பூசணி சத்து நிறைந்தது, மருத்துவ குணங்கள் கொண்டதாகும். நோய் எதிர்ப்பு சக்தியைத் தரும். இருதய நோய், சர்க்கரை நோய், குடல் புற்று நோய் உள்ளிட்ட பல்வேறு நோய்களை தடுக்க உதவுவதாக அவர் கூறுகிறார். போதுமான லாபம் கிடைக்கிறது அதனால், வெயில் என்றும் பாராமல் சாலையில் ஓரத்தில் கொட்டகை அமைத்து விற்பனை செய்து வருவதாக கூறுகிறார் அவர்.

## நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்படுமா?

திருக்கோவிலூர் அருகே நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தற்போது விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

திருக்கோவிலூர் மற்றும் அதன் சுற்று வட்டாரத்தில் அதிகளவில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. அறுவடை செய்யப்பட்ட நெல் மூட்டைகளை அரகண்டநல்லூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்துக்கு விவசாயிகள் கொண்டுச் செல்கின்றனர். குறிப்பாக, இக்கூடத்துக்கு கடந்த 15 நாள்களுக்கும் மேலாக 15 ஆயிரத்துக்கும் மேல் நெல் மூட்டைகள் வந்து குவிகிறது. தினமும் சுமார் 10 ஆயிரம் மூட்டைகள் மட்டுமே கொள்முதல் செய்யப்படுகிறது.

கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகளை வெளியில் எடுத்துச் செல்ல லாரிகள் கிடைக்கவில்லை என்றும், விவசாயிகளுக்கு உடனுக்குடன் பணப் பட்டுவாடா செய்ய முடியவில்லை என்றும் வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது.

கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகளுக்கு வியாபாரிகள் நேரடியாக பணம் வழங்காமல் ரூ.1000-க்கு 100 கமிஷன் அடிப்படையில் இடைத்தரகர்கள் மூலம் பணப் பட்டுவாடா செய்வதாகவும், தற்போது நெல் விலையில் திடீர் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் விவசாயிகள் தரப்பில் கூறப்படுகிறது. இதையடுத்து இப்பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கு அரசு உடன் நடவடிக்கை எடுத்தால் பயனாக இருக்கும் என்கின்றனர் விவசாயிகள்.

**நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் உடனடி பணம் பட்டுவாடா: ஆட்சியர்**

நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லுக்கு உடனடியாகப் பணம் பட்டுவாடா செய்ய ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார்.

கடலூர் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு: கடலூர் மாவட்டத்தில்

143 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன. எனவே விவசாயிகள் அறுவடை செய்கின்ற நெல்லை அருகாமையில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்து பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளிடம் இருந்து நுகர்பொருள் வாணிபக் கழகம் கொள்முதல் செய்யும் நெல்லுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. முதல் ரக நெல்லுக்கு குவிண்டாலுக்கு ரூ.1,415-ம், சாதாரண ரகத்துக்கு ரூ.1,360-ம் வழங்கப்படுகிறது. இதை விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ளுமாறு ஆட்சியர் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஏரிகளில் சிமென்ட் பாசன கால்வாய்: விவசாயிகள் சங்கத்தினர் மனு**

மாவட்டத்தில் உள்ள ஏரிகளில் சிமென்ட் பாசன கால்வாயை கட்ட வேண்டும் என திருவள்ளூரில் நடைபெற்ற ஏரி பாசன விவசாயிகள் சங்க கூட்டத்தில் சங்க நிர்வாகிகள் கோரிக்கை மனு கொடுத்தனர்.

திருவள்ளூர் மாவட்ட ஏரி பாசன சங்க விவசாயிகள் குறைதீர்வு நாள் கூட்டம் சனிக்கிழமை பொதுப் பணித்துறை அலுவலகத்தில் நடைபெற்றது. பொதுப்பணித்துறை (ஆறுகள்) செயற்பொறியாளர் பழனிகுமார் தலைமை வகித்தார். உதவி செயற்பொறியாளர் ராஜன் முன்னிலை வகித்தார்.

இதில் மாவட்டம் முழுவதுமுள்ள பாசன விவசாய சங்க நிர்வாகிகள் பங்கேற்று தங்களது பகுதியில் உள்ள ஏரிகளில் உள்ள குறைகள் குறித்து கோரிக்கை மனு கொடுத்தனர். விளாப்பாக்கம் ஏரியில் கட்டப்பட்டு வந்த தடுப்பணை பாதியில் நிறுத்தப்பட்டுள்ளது. அந்த தடுப்பணையை விரைவில் முடிக்க வேண்டும். மேலும் அந்த ஏரியில் தொடர்ந்து மண் எடுத்ததால் அண்மையில் கட்டப்பட்டு பாதியில் விடப்பட்டுள்ள தடுப்பணை இடிந்து விழும் அபாயத்தில் உள்ளது. எனவே மண் எடுப்பதைத் தடுக்க வேண்டும்.

வெள்ளியூர் ஏரியை நம்பி 2,500 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதனால் அந்த ஏரியில் மதகு கட்ட வேண்டும். அந்த ஏரியிலும் மண் எடுப்பதை தடுத்து நிறுத்த வேண்டும். குருவாயல் ஏரியில் கரையை வெட்டி விவசாயம் செய்து வருகின்றனர். இதனால் மற்ற விவசாயிகளுக்கு பாசனத்திற்கு உபயோகமில்லாமல் அந்த ஏரி உள்ளது.

எனவே அந்த ஏரிகளில் இருந்து ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்.

சிறுங்காவூர் ஏரியில் கரையை உடைத்து மர்ம நபர்கள் மண் எடுத்துச் செல்கின்றனர். அதைத் தடுத்து மீண்டும் அந்த ஏரிக்கு கரை அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை மனுவாக கொடுத்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## சீரக சம்பா விளைச்சல் பாதிப்பு : பிரியாணி அரிசி விலை உயர்வு

**சேலம்**: தமிழகத்தில் விளைச்சல் இல்லாததால், சீரக சம்பா அரிசிக்கு, தட்டுப்பாடு ஏற்பட்டு, குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில், சைவ, அசைவ பிரியாணி தயாரிப்பில், சீரக சம்பா ரக அரிசி, அதிக அளவில் பயன்படுத்தப்படுகிறது. இந்த ரக அரிசி, தமிழகத்தில், துறையூர், தொப்பம்பட்டி, பி.மேட்டூர், வைரசெட்டிபாளையம் உள்ளிட்ட பகுதிகளில் விளைகிறது. தமிழகம், மேற்கு வங்காளத்தில் இருந்து, அதிக அளவில், அரபு நாடுகளுக்கு பிரியாணி தயாரிக்க, சீரக சம்பா அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. கடந்த ஆண்டு, எதிர்பார்த்த மழை இல்லாததால், தமிழகத்தில், சீரக சம்பா விளைச்சல் எதிர்பார்த்த அளவு இல்லை. குறைந்த அளவில் விளைந்த நெல்லையும், வெளிமாநில வியாபாரிகள், அதிக விலை கொடுத்து வாங்கிச் சென்று விட்டனர். தற்போது, தமிழகத்தில், சீரக சம்பா நெல், அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. மேற்கு வங்காளத்தில் இருந்து, தமிழகத்துக்கு, சீரக சம்பா ரக அரிசி விற்பனைக்கு வந்து கொண்டு இருந்தது. இங்கு, விளைச்சல் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால், வியாபாரிகள், அதிக லாபம் பெறும் நோக்கில், மேற்கு வங்காள, சீரக சம்பா அரிசியை, அதிக அளவில் வாங்கி, பதுக்கி வருகின்றனர். இதனால், மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வரும், சீரக சம்பா ரக அரிசி வரத்திலும், தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, விலை, குவிண்டாலுக்கு, 500 ரூபாய் வரை உயர்வு ஏற்பட்டுள்ளது. மொத்த விலையில், கடந்த வாரம், முதல் ரக சீரக சம்பா அரிசி, குவிண்டால், 7,400 ரூபாய்க்கு விற்றது, 7,900 ரூபாயாகவும், இரண்டாம் ரகம், 6,500 ரூபாய்க்கு விற்றது, 6,900 ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.

## பாரம்பரிய கால்நடைகளின் இனம் காக்க கண்காட்சி நடத்த கால்நடை துறை முடிவு

**ஈரோடு:**பர்கூர், காங்கேயம் மற்றும் உம்பளச்சேரி கால்நடை இனங்களைக் காக்க, மூன்று இடங்களில் கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடத்த, கால்நடை பராமரிப்புத் துறை முடிவு செய்துள்ளது. கலப்பின கால்நடைகளை விட, இவை அதிக நோய் எதிர்ப்பு சக்தி, பராமரிப்பு செலவு குறைவு ஆகிய தகுதிகள் கொண்டவை. மாடுகளில், பல ரகங்கள் உள்ளன. உம்பளச்சேரி, ஜெர்சி, கலப்பின ஜெர்சி, பீரிசியன், கலப்பின பீரிசியன், காங்கேயம் இனம் மற்றும் முர்ரா உள்ளிட்ட இன மாடுகள் உள்ளன. இவற்றில் காங்கேயம் இன காளைகளுக்கு உள்ள மகத்துவமே தனி. இந்த ரக மாடுகள், திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில் அதிகம் வளர்க்கப்படுகின்றன. இவ்வின காளைகளுக்கு இணையாக, பர்கூர் இன மாடுகள் உள்ளன. இவ்வகை மாடுகள், ஈரோடு மாவட்டம், அந்தியூர் அருகே, பர்கூர் பகுதியில் அதிகம் உள்ளன. இவ்வின மாடுகள், பட்டிமாடு, செம்மறை என, அழைக்கப்படுகின்றன. சிவப்பு நிறத்தில், வெள்ளை திட்டுக்களுடன் காணப்படும். இவ்வினத்தின் கண்கள், மூக்கு மற்றும் குளம்புகள், வெளிர் சிவப்பு நிறத்தில் இருக்கும் என்பதே சிறப்பு.

நடுத்தர உருவம் கொண்ட இவ்வின மாடுகள் பயந்த சுபாவமும், மிரட்சி அடையும் குணமும் கொண்டவை. மலைப்பாங்கான பகுதியில் கடுமையான வேலைக்காகவும், பாரம் ஏற்றிச் செல்லவும் அதிகம் பயன்படுத்துவர். நோய் எதிர்ப்பு சக்தி அதிகமுள்ளவை. பர்கூர் பகுதியில் இந்த இன மாடுகள், 4,000 எண்ணிக்கையில் மட்டுமே உள்ளன. பல ஆண்டுகளாக இதன் இனத்தைப் போற்றி பாதுகாக்காததால், அதன் இனம் கொஞ்சம் கொஞ்சம் அழிந்து வருகிறது. இம்மூன்று இனங்களையும், போற்றி பாதுகாக்கும் வகையில், கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், பல்வேறு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதனொரு பகுதியாக, பாரம்பரிய கால்நடைகளின் இனம் காக்க, கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், தமிழகத்தில், மூன்று இடங்களில் கண்காட்சி நடத்த திட்டமிட்டுள்ளனர்.

காங்கேயம் கால்நடைகளை போற்றி பாதுகாக்கும் பொருட்டு, காங்கேயம் இன கால்நடை கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி, திருப்பூர் மாவட்டம், காங்கேயத்தில், பிப்., 7 மற்றும் 8ம் தேதிகளில் நடக்கிறது. கண்காட்சியில் கலந்து கொள்ளும், சிறந்த கால்நடைகளுக்கு, பரிசு வழங்கப்பட உள்ளது.

இதேபோல், பர்கூர் இன கால்நடைகளுக்கு, ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை சார்பில், பர்கூர் அருகே திருசனாம்பாளையத்தில், பிப்., முதல் வாரத்தில், கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. உம்பளச்சேரி கால்நடை இனங்களுக்கு, நாகை மற்றும் திருவாரூர் மாவட்டத்தில், கருத்தரங்கம் மற்றும் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

கண்காட்சியில் இடம்பெறும் கால்நடை இனங்களின் சிறந்த இனங்களைத் தேர்ந்தெடுப்பதில், கால்நடை மருத்துவப் பல்கலை பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவன (யு.டி.ஆர்.சி.,) அதிகாரிகள் ஈடுபடுத்தப்படுவர்.

**ரோஜா ஏற்றுமதி அதிகரிப்பு**



**ஓசூர்**:ஓசூரில் இருந்து, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் காதல் ரோஜா பூக்களின் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.கிருஷ்ணகிரி மாவட்டம்,ஓசூர் அடுத்த,

அமுதகொண்டப்பள்ளியில், டிட்கோ உதவியுடன், 370 ஏக்கரில், ஆசியாவிலேயே, மிக பெரிய, 'டான்ப்ளோரா' ரோஜா மலர் பண்ணை செயல்படுகிறது.இங்கு விளையும் ரோஜா மலர், ஆரம்ப காலத்தில், ஆண்டு முழுவதும், அரேபிய நாடுகள், ஐரோப்பா, ஆஸ்திரேலியா, சிங்கப்பூர், மலேசியா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதியானது.

குறிப்பாக, காதலர் தினத்தையொட்டி, டான்ப்ளோராவில் இருந்து, 6 கோடி ரோஜா மலர்கள் ஏற்றுமதியாவது வழக்கம்.கடந்தாண்டு நிலவிய வறட்சியால், டான்ப்ளோராவில் வெறும், 40 ஏக்கருக்கு குறைவாக, ரோஜா சாகுபடி செய்யப்பட்டு, கடந்த காதலர் தினத்தன்று, 20 லட்சம் ரோஜா மலர் ஏற்றுமதி செய்யப்பட்டது.இந்நிலையில், நடப்பாண்டில், ஓசூரில் நிலவும் குளிர் சீசனால், ரோஜாவின் விளைச்சல் அமோகமாக உள்ளதால், வெளிநாடுகளுக்கு, காதலர் தின ரோஜாக்கள் ஏற்றுமதி செய்யப்படுகிறது.இதனால், ரோஜாமலர் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

### ரப்பர் விலை வீழ்ச்சியால் ரூ.10 ஆயிரம் கோடி இழப்பு



**புதுடில்லி**: இயற்கை ரப்பர் விலை வீழ்ச்சியால், விவசாயிகளுக்கு, 10 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. நாட்டின் மொத்த ரப்பர் உற்பத்தியில், கேரளாவின் பங்களிப்பு, 90 சதவீதமாக உள்ளதால், அம்மாநில விவசாயிகள் மேற்கண்ட இழப்பை சந்தித்துள்ளனர்.

கடந்த, 2011ம் ஆண்டு ஒரு கிலோ, 'ஆர்.எஸ்.எஸ்4' ரகம் இயற்கை ரப்பர் விலை, 248 ரூபாயாக இருந்தது. இது, 2012ம் ஆண்டு, 200 ரூபாயாகவும், சென்ற ஆண்டு, 150 ரூபாயாகவும் சரிவடைந்தது. நடப்பாண்டு, இந்த விலை, 135 ரூபாயாக மேலும் வீழ்ச்சி கண்டுள்ளது. சர்வதேச அளவில், இயற்கை ரப்பர் உற்பத்தி அதிகரித்துள்ளதால், அதன் விலை சரிவடைந்து வருகிறது. இதன் காரணமாக, குறைந்த விலையில் அதிக அளவில் ரப்பர் இறக்குமதியாகிறது.

இதனால், குறிப்பாக, கேரளாவில், ரப்பர் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள, 50 லட்சம் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. இதில், 40 சதவீத குடும்பங்கள், ரப்பர் வாயிலான வருவாயை மட்டுமே சார்ந்துள்ளன.

ரப்பர் விவசாயிகளில், 70.75 சதவீதம் பேர், ஒரு ஹெக்டேருக்கும் குறைவாகவே, ரப்பர் தோட்டம் வைத்துள்ளனர். சென்ற ஆண்டு, ஏப்., நவ., வரை, 2,37,723 டன் இயற்கை ரப்பர் இறக்குமதியானது. இது, 2012ம் ஆண்டு, இதே காலத்தில்,1,55,075 டன்னாக இருந்தது. ரப்பர் இறக்குமதியை கட்டுப்படுத்தும் நோக்கில், அதன் மீதான சுங்க வரி, கிலோவுக்கு, 20 ரூபாயில் இருந்து, 30 ரூபாயாக உயர்த்தப்பட்டது. இருந்தபோதிலும், ரப்பர் விலை தொடர்ந்து வீழ்ச்சி கண்டு வருவதால், வரி உயர்வு பயனளிக்கவில்லை என, பாதிக்கப்பட்டோர் தெரிவித்தனர். இதனிடையே, கேரள அரசு, ரப்பர் விலை சரிவை தடுக்க, வெளிச் சந்தையில் அதனை கொள்முதல் செய்ய திட்டமிட்டுள்ளது. இதற்காக, மத்திய வர்த்தக அமைச்சகத்திடம், 100 கோடி ரூபாய் வழங்குமாறு கோரியுள்ளது.

**வைக்கோல் கொள்முதல்: கால்நடைத்துறை ஏற்பாடு**

ஈரோடு: உலர் தீவன கிடங்குகளுக்கு, விருப்பமுள்ள விவசாயிகள், தங்கள் வைக்கோலை விற்பனை செய்து, பயனடைய ஈரோடு மாவட்ட கால்நடை பராமரிப்பு துறை கேட்டுக்கொண்டுள்ளது. வறட்சி காலத்தில், தீவன பற்றாக்குறையால் ஏற்படும் பால் உற்பத்தி இழப்பை ஈடுகட்டவும், கால்நடை வளர்க்கும், சிறு, குறு விவசாயிகளின் வாழ்வாதாரத்தை காக்க, கால்நடைகள் வளர்க்கும் தொழிலை, விவசாயிகள் வறட்சி காலத்திலும், லாபகரமாக நடத்திட, ஈரோடு மாவட்டத்தில் உலர் தீவன கிடங்கு திட்டம் செயல்படுகிறது. ஈரோடு மாவட்டத்தில், பெருந்துறை, எழுமாத்தூர், பவானி, பொலவக்காளிபாளையம்

மற்றும் நம்பியூர் ஆகிய, ஐந்து இடங்களில், கால்நடை மருத்துவமனைகளில் இத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது. இம்மையங்களில், சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு, ஒரு கிலோ வைக்கோல், இரண்டு ரூபாய் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

இம்மையங்களில் வைக்கோல் தேவையை பூர்த்தி செய்ய, வைக் கோல் கொள்முதல் செய் யப்படுகிறது.நன்கு உலர்ந்த, 10 சதவீதத்துக்கு மேல் ஈரமில்லாத, பூசனம் பிடித்து மக்கிப்போகாத, சேற்று மண் கலந்து இருக்கக்கூடாது. வைக்கோலை விற்க விரும்பும், விவசாயிகள், வியாபாரிகள், போட்டி விலைப்பட்டியல், விண்ணப்பத்தை, ஈரோடு கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஐந்து கிலோ கட்டுகளாக கட்டி கொடுக்க வேண்டும். ஏற்றுக்கூலி, இறக்குகூலி, வண்டி வாடகை, கட்டுக்கட்டுதல், தீவன கிடங்கில் அடுக்கி வைப்போர் அமைத்து தருவதற்கான செலவினம் அனைத்தும் விண்ணப்பதாரரை சேர்ந்தது என, கலெக்டர் சண்முகம் மற்றும் கால்நடைத்துறை மண்டல இணை இயக்குனர் ஜெயராமன் ஆகியோர் கேட்டுக்கொண்டனர்.

## கோடை சாகுபடி பயிற்சி

**காஞ்சிபுரம்** : வாலாஜாபாத் வட்டார வேளாண் விரிவாக்க மையம் சார்பில், இன்று வையாவூர் ஊராட்சியில், கோடை கால சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி முகாம் நடைபெற உள்ளது.

வாலாஜாபாத் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தின் சார்பில், கடந்த 21ம் தேதி முதல், விவசாயிகளுக்கு கோடை கால சாகுபடி தொழில்நுட்பப் பயிற்சி முகாம் துவக்கப்பட்டுள்ளது. இன்று வையாவூர் ஊராட்சியில் நடைபெற உள்ளது. இம்முகாமில், கோடை காலத்தில் குறைந்த நீரை பயன்படுத்தி சாகுபடி செய்யும் 'சிறு தானிய உற்பத்தி பயிற்சி நடைபெற உள்ளது. வாலாஜாபாத் வட்டார வேளாண் அலுவலர் ஜெகதா, விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க உள்ளார். அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் தவறாமல் கலந்து கொண்டு பயனடையலாம் என, வட்டார வேளாண் உதவி இயக்குனர் முருகன் தெரிவித்துள்ளார்.

## பண்ணை பள்ளியில் திருந்திய நெல்

**ஆர்.கே.பேட்டை** : வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ், பண்ணை பள்ளியில் திருந்திய நெல் சாகுபடி குறித்து, விவசாயிகளுக்கு நேரடி கள பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆர்.கே.பேட்டை அடுத்த, சகஸ்ரபத்மாபுரம் கிராமத்தில், பண்ணை பள்ளி என்ற நேரடி வயல் பள்ளியில், விவசாயிகளுக்கு பாடம் நடத்தப்பட்டது.

ஆர்.கே.பேட்டை வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குனர் தலைமையில் நடந்த வகுப்பில், 100 விவசாயிகள் கலந்து கொண்டனர்.

இதில், இயந்திரம் கொண்டு நெல் நடவு செய்யும் முறை, கோனோவீடர் மூலம் களை பறிப்பு, பூச்சி மேலாண்மை, உரம், நீர் மேலாண்மை, பயிர் பாதுகாப்பு உள்ளிட்ட அம்சங்கள், விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

இது குறித்து விவசாயி முகுந்தன் கூறுகையில், "திருந்திய நெல் சாகுபடியில், நெல் நடவு குறிப்பிட்ட இடைவெளியில் நடப்படுவதால், களை மேலாண்மை எளிதாக இருக்கும். பூச்சிகள் கட்டுப்படுத்தப்படும். பயிர் அதிக துார் விட்டு வளரும். இதனால், கூடுதல் மகசூல் கிடைக்கிறது" என்றார்.

## அவலூர்பேட்டை பகுதி கிராமங்களில் கோவக்காய், பாகற்காய் சாகுபடி அமோகம்

**அவலூர்பேட்டை** : அவலூர்பேட்டை பகுதியில் கோவக்காய், பாகற்காய் தோட்டங்களை அமைப்பதில் விவசாயிகள் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.

மேல்மலையனூர் ஒன்றியம் கோவில்புரையூர் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் கோவக்காய், பாகற்காய் தோட்டம் அமைத்து சாகுபடி செய்கின்றனர். கோவக்காய் தோட்டம் அமைப்பதற்கான விதையாக, இதன் தண்டினை திருவண்ணாமலை மாவட்டத்திலிருந்து வாங்கி வருகின்றனர்.

தண்டினை முதலில் நடவேண்டும். நட்டதிலிருந்து 15 தினங்களுக்குள் செடி முளை விட்டு வளரும், இதற்கு தகுந்த உரமிட்டு, மருந்து தெளிக்க வேண்டும்.

ஒரு மாதம் ஆனதும் கொம்பு நட்டு, நிலம் முழுவதும் கொடி படருவதற்கான அளவில் பந்தல் அமைக்க வேண்டும். 45 வது நாளிலிருந்து கோவக்காய் வளர்ந்து

விடும்; தொடர்ந்த 5 ஆண்டுகள் வரை இதிலிருந்து காய்களை பறித்து கொண்டே இருக்கலாம்.

ஒரு நாள் விட்டு ஒரு நாள் என்ற முறையில் பறிக்கும் காய்களை சென்னைகோயம்பேடு மார்க்கெட் வியாபாரிகள் நேரடியாக கொள்முதல் செய்து கொள்கின்றனர். சீசனுக்கு ஏற்ப கிலோ ஒன்றுக்கு 10 முதல் 25 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

இந்த பயிருக்கு களை எடுத்தலும், வாரத்திற்கு ஒரு முறை மருந்து தெளித்தலும், தண்ணீர் விடுவதும் அவசியமாகும்.ஆனால் ஒரு முறை செலவு செய்தால் 5 ஆண்டுகள் வரை தொடர்ந்து பலன் தருவதால் இந்த பயிரை சாகுபடி செய்வதில் விவசாயிகள் பலரும் ஆர்வத்துடன் ஈடுபட்டுள்ளனர்.பாகற்காய் சாகுபடி:இதே போல் பாகற்காயையும் சாகுபடி செய்கின்றனர். ஆனால் இது 3 மாத பயிராகும். 2 மாதங்கள் மட்டுமே காயை அறுவடை செய்ய இயலும். கிலோ ஒன்றுக்கு 20 ரூபாய் விலை நிர்ணயம் செய்யப் படுகிறது.

இருந்தும் தொடர்ந்து நெல், கரும்பு பயிரிட்டு வந்த விவசாயிகள் தண்ணீர் இல்லாததால், அதற்கேற்ப மாற்று பயிர்களை சாகுபடி செய்வதில் ஆர்வம் செலுத்தி வருகின்றனர். இவர்களுக்கு சொட்டு நீர் பாசன வசதிகளை செய்து தருவதற்கு வேளாண் அதிகாரிகள் உரிய ஆலோசனைகளை வழங்கும்பட்சத்தில், காய்கறிகள் உற்பத்தி கணிசமாக அதிகரிக்க வாய்ப்புள்ளது.

### கூனிமேடு பகுதி கால்நடைகள் மருத்துவ சிகிச்சைக்கு அவதி

**மரக்காணம்** : கூனிமேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை ஏற்படுத்த வேண்டும் என அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மரக்காணம் ஒன்றியத்திற்கு உட்பட்ட கூனிமேடு ஊராட்சியில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இதன் அருகே ஏரிமேடு, கம்மங்கொல்லைமேடு, அம்பேத்கர் நகர், கூனிமேடு கிராமம், செட்டிக்குப்பம், செய்யாங்குப்பம், காளியாங்குப்பம், அனுமந்தை, கீழ்புத்தப்பட்டு ஆகிய கிராமங்கள் உள்ளன. இப்பகுதியில் விவசாயம் முக்கிய தொழிலாக உள்ளது. இதற்கு அடுத்த படியாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வருகின்றனர். இப்பகுதியில் கால்நடை மருத்துவமனைக்கு இடவசதியில்லாததால், ஊராட்சி மன்ற அலுவலக கட்டடத்தில்

அடிப்படை வசதிகள் இன்றி இயங்கி வருகிறது. இப்பகுதியில் கால்நடைகளுக்கு திடீரென நோய் பாதிப்பு மற்றும் இதர தேவைகளுக்காக 15 கி.மீ. தூரத்தில் இருக்கும் புதுச்சேரி மாநிலம் கனகசெட்டிகுளம் பகுதிக்கு செல்ல வேண்டியுள்ளது. மேலும் நோய் ஏற்படும் ஆடு, மாடுகளுக்கு விரைந்து சிகிச்சை அளிக்க முடியாததால் இறப்பு விகிதம் அதிகரித்து வருகிறது.

மேற்கண்ட கிராமங்களில் உள்ள கால்நடை பராமரிப்பாளர்களின் நலன் கருதி, கூனிமேடு பகுதியில் கால்நடை மருத்துவமனை அமைக்க கால் நடைத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கலெக்டருக்கு மனு அனுப்பி உள்ளனர்.

## இலவச கறவை மாடுகளின் மூலம் பால் உற்பத்தியை பெருக்க முகாம் : கலெக்டர் தகவல்

**சிவகங்கை:** ""மாவட்டத்தில், கடந்த 3 ஆண்டுகளில், 650 பயனாளிகளுக்கு கறவை மாடுகளும், 3127 பயனாளிகளுக்கு, 12 ஆயிரத்து 508 ஆடுகளும் வழங்கப்பட்டுள்ளதென," கலெக்டர் ராஜாராமன் தெரிவித்தார்.அவர் கூறியதாவது: முதல்வர் ஜெ., 2011 செப்.,15 அன்று, இலவச கறவை மாடு, ஆடுகள் வழங்கும் திட்டம் துவக்கினார். வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள பெண்களின், வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில், 31 மாவட்டங்களில், 3.61 லட்சம் பயனாளிகளுக்கு, 14 லட்சத்து 44 ஆயிரத்து 488 வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. வெண்மை புரட்சியை ஏற்படுத்தும் வகையில், 21 மாவட்டங்களில், 32 ஆயிரத்து 44 பயனாளிகளுக்கு கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. சிவகங்கையை பொறுத்தமட்டில், கடந்த 3 ஆண்டுகளில், 650 பயனாளிகளுக்கு கறவை மாடுகள், 3,127 பயனாளிகளுக்கு, 12 ஆயிரத்து 508 வெள்ளாடு, செம்மறி ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. பால் உற்பத்தியை அதிகரிக்கவும், ஆடுகளின் எடையை அதிகரிக்க செய்யும் நோக்கில், ஜன.,24 மற்றும் 25 ஆகிய இரண்டு நாட்கள், பசுக்களுக்கு இனப் பெருக்க மருத்துவ பரிசோதனை, ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாமும் நடத்தப்படும். இந்த வாய்ப்பை பயனாளிகள் பயன்படுத்தி, பால் உற்பத்தியை அதிகரிக்கவேண்டும், என்றார்.

**உளுந்து, பாசிப்பயறு சாகுபடி செய்தால் கூடுதல் மகசூல்: விவசாயிக்கு அழைப்பு**

**நாமக்கல்**: "உணவு தானிய இயக்கம் திட்டத்தின் கீழ், உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்து, குறுகிய காலத்தில், கூடுதல் மகசூல் பெறலாம்' என, கபிலர்மலை வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ, விவசாயிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார். தமிழக முதல்வரின் உணவு தானிய உற்பத்தி இயக்கத்தின் கீழ், கோடை சாகுபடி முனைப்பு இயக்கம், தற்போது நடந்து வருகிறது. ப.வேலூர் அடுத்த கபிலர்மலை வட்டாரத்தில், கரும்பு மற்றும் மரவள்ளி நடவு பணி, தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஊடுபயிராகவும், நெல் அறுவடை செய்தபின், தனிப்பயிராகவும், உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்து, குறுகிய காலத்தில், கூடுதல் வருவாய் பெற, விவசாயிகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டு, மழை குறைவாக பெய்துள்ளதாலும், நீர் நிலைகளில், தண்ணீர் குறைந்து வருவதாலும், நெல் அறுவடை செய்த வயல்களில், குறுகிய காலப்பயிராக உளுந்து மற்றும் பாசிப்பயறு சாகுபடி செய்து பயனடையலாம். தனிப்பயிராக சாகுபடி செய்ய, ஏக்கருக்கு எட்டு கிலோ விதையும், ஊடுபயிருக்கு, நான்கு கிலோ விதையும் போதுமானது. தற்போது, சாகுபடி செய்துவரும் மரவள்ளி மற்றும் கரும்பில் ஊடுபயிராக, உளுந்து அல்லது பாசிப்பயறு சாகுபடி செய்து, உபரி வருமானம் பெறலாம். ஒரு கிலோ விதைக்கு, நான்கு கிராம் டிரைக்கோடெர்மா விரிடி அல்லது பத்து கிராம் சூடோமோனாஸ் அல்லது இரண்டு கிராம் கார்பென்டாசிம், இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இரண்டு சதவீதம் டி.ஏ.பி., கரைசலை, பூ பூக்க ஆரம்பிக்கும்போது, ஒரு முறையும், 15 நாட்கள் கழித்து ஒரு முறையும் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு சராசரியாக, 600 கிலோ தனிப்பயிரிலும், 250 கிலோ ஊடுபயிரிலும் மகசூல் கிடைக்கும். விவசாயிகளுக்கு தேவையான சான்று பெற்ற விதை உளுந்து, போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. "மேலும், விவரங்களுக்கு, கபிலர்மலை வட்டார வேளாண் விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம்' என, வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜூ தெரிவித்துள்ளார்.

## வியாபாரிகள் பங்கேற்காததால் வாழை விலை பாதியாக சரிவு

**ப.வேலூர்**: வெளியூர் வியாபாரிகள் பங்கேற்காததால், வாழைத்தார் விலை பாதியாக சரிந்தது. ப.வேலூர் மற்றும் காவிரி கரையோரப்பகுதிகளான பொத்தனூர், பாண்டமங்கலம், அணிச்சம்பாளையம், நன்செய் இடையாறு, குப்புச்சிபாளையம், ஓலப்பாளையம், பாலப்பட்டி போன்ற பகுதிகளில், ஆயிரக்கணக்கான ஏக்கர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இங்கு, பூவன், ரஸ்தாளி, மொந்தன், பச்சநாடன் போன்ற ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நன்கு விளைந்த வாழைத்தார்களை அறுவடை செய்து, ப.வேலூரில் நடக்கும் தினசரி மார்க்கெட்டுக்கு கொண்டு செல்கின்றனர். அங்கு, நாமக்கல், சேலம், கரூர், ஈரோடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளை சேர்ந்த உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் போட்டி போட்டு ஏலம் எடுத்து, விற்பனைக்காக, வெளியூர் அனுப்பி வைக்கின்றனர். பண்டிகை மற்றும் முக்கிய சீஸன் காலங்களில் வாழைத்தார் விலை உயர்வதும், மற்ற காலங்களில் விலை சரிவதும் வாடிக்கை. அதேபோல், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு உச்சத்தில் இருந்த வாழைத்தார் விலை, தற்போது பாதியாக சரிந்துள்ளது. இது, பயிரிட்ட விவசாயிகளை, கவலை அடையச் செய்துள்ளது.

நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், 300 வாழைத்தார்கள் கொண்டுவரப்பட்டது. அதில், கடந்த வாரம், 500க்கு விற்பனையான பூவன் தார் ஒன்று, 250க்கு ஏலம் போனது. அதேபோல், 400க்கு விற்பனையான ரஸ்தாளி தார் ஒன்று, 250க்கு விலைபோனது. 300க்கு ஏலம் போன, பச்சநாடன் ஒரு தார், 200க்கு விற்பனையானது. ஏழு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட மொந்தன் காய் ஒன்று, நான்கு ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. "முக்கிய விசேஷ தினங்கள், பண்டிகை இல்லாததால், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் உள்ளூர் வியாபாரிகள் மட்டுமே பங்கேற்றனர். வெளியூர் வியாபாரிகள் யாரும் கலந்து கொள்ளவில்லை. அதனால், இந்த விலை சரிவு ஏற்பட்டுள்ளது' என, விவசாயிகள் தெரிவித்தனர்.

## மாற்று பருவ பயிர் சாகுபடி

**துவரிமான்** :திருப்பரங்குன்றம் ஒன்றிய வேளாண் துறை முனைப்பு இயக்கம் சார்பில், மாற்றுப் பருவ பயிர்சாகுபடி பிரசாரம் துவரிமானில் நடந்தது.
ஊராட்சி தலைவர் சேதுராமன் தலைமை வகித்தார். துணைத்தலைவர் ஆதிமூலம் துவக்கினார். உர, விதைத்துறை அலுவலர் சேதுராமன் வரவேற்றார்.'நெல் அறுவடை செய்த வயல் நிலத்தில் பருவ நிலைக்கேற்ப மாற்றுப் பயிராக பயறு வகைகள், காய்கறிகள் சாகுபடி செய்தல், கூடுதல் மகசூல் பெற்று அதிக லாபம்பெறலாம்' என, வேளாண் உதவி இயக்குனர் பன்னீர்செல்வம் ஆலோசனை கூறினார். உதவி வேளாண் அலுவலர் பாலாமணி நன்றி கூறினார். கீழமாத்தூர் கூட்டத்திற்கு ஊராட்சி தலைவர் பாண்டி, துணைத்தலைவர் தங்கராஜ் மற்றும் விவசாயிகள் பங்கேற்றனர்.

## நீலகிரியில் தேயிலை வர்த்தகம் பாதிப்பு :அமெரிக்கா, ரஷ்யாவில் பனி எதிரொலி

**ஊட்டி** : அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளில் அதிகரித்துள்ள பனிப்பொழிவின் பாதிப்பு, நீலகிரி தேயிலை வர்த்தகத்தில் எதிரொலித்துள்ளது.
நீலகிரி மாவட்டத்தில் உற்பத்தியாகும் தேயிலை துாள், ரஷ்யா, அமெரிக்கா, உட்பட சில வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. இந்தாண்டின் 5வது ஏலம், குன்னுார் தேயிலை ஏல மையத்தில் நடந்தது. மொத்தம் 11.51 லட்சம் கிலோ தேயிலை துாள் விற்பனைக்கு வந்தது. இதில், இலை ரகம் 7.95 லட்சம், டஸ்ட் ரகம் 3.56 லட்சம் கிலோ அடங்கும்; மொத்தம் 81 சதவீத தேயிலை துாள் விற்பனை செய்யப்பட்டது.
பொதுவாக, நீலகிரியில், பனிக்காலத்தில் விளையும் தேயிலை துாள் தரம், நிறம், சுவை போன்ற குணங்கள் நிறைந்ததாக இருக்கும் என்ற நிலையில், அத்தகைய தேயிலை துாளுக்கு, கடந்த இரு வாரமாக கிராக்கி அதிகரித்துள்ளது.
அதனடிப்படையில் இந்த வார ஏலத்திலும் சி.டி.சி., ரக உற்பத்தியில், ஹோம்டேல் தொழிற்சாலை தேயிலை துாளுக்கு அதிகபட்சம் கிலோவுக்கு 205 ரூபாய், ஆர்தோடக்ஸ் ரகத்தில் கோத்தகிரி கோடநாடு தொழிற்சாலையின் உற்பத்திக்கு 300 ரூபாய் விலை கிடைத்தது.

இருப்பினும், ரஷ்யா, அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றம், குன்னூர் தேயிலை ஏல மையத்தில் எதிரொலித்துள்ளது. சர்வதேச நிர்வாக இயல் ஆலோசகர் சுந்தர் கூறுகையில்,“அமெரிக்கா, ரஷ்ய நாடுகளில், நீலகிரி தேயிலை துாளுக்கு கிராக்கி அதிகம். தற்போது, அமெரிக்காவில் கலிபோர்னியா, வாஷிங்டன், நியூயார்க், மேரிலேண்ட் பகுதிகளில், மைனஸ் 24 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை நிலவுவதால், பனிப்பொழிவு மிகக் கடுமையாகி, சாலைகள் பனியால் மூடப்பட்டுள்ளன,".

"இதனால் போக்குவரத்து ஸ்தம்பித்துள்ளது; பெரும்பாலான கடைகள் மூடப்பட்டுள்ளன.

இதுபோன்ற நிலை, ரஷ்யாவிலும் ஏற்பட்டுள்ளது. இதனால், நீலகிரி தேயிலை துாள் இவ்விரு நாடுகளுக்கும் அனுப்பப்படுவதில்லை. அதே நேரம், வட மாநிலங்களில் தேயிலை உற்பத்தி குறைந்துள்ளதால், வட மாநில வர்த்தகர்கள் நீலகிரி தேயிலை துாளை வாங்குகின்றனர்.

இதனால், ஏற்றுமதி வர்த்தகம் பாதித்தாலும், உள்நாட்டு வர்த்தகம் கை கொடுக்கிறது,” என்றார்.

### மண்புழு உரக்கூடம் அமைக்க மானியம்

**திண்டுக்கல்**:மாவட்டத்தில் மண்புழு உரக்கூடம் அமைப்பதற்கான மானியத்தொகை தேர்வு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டது. தேசிய வேளாண் வளர்ச்சி திட்டம் மற்றும் மானாவாரி வேளாண்மை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் சாகுபடி உற்பத்தியை பெருக்குவதற்காக பல்வேறு மானிய உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாவட்டத்தில் மண்புழு உரக்கூடம் ஏற்படுத்துதல், உயிர் உரங்கள் தயாரித்தல், தேவையான இடுபொருட்களை வாங்குவதற்காக விவசாயிகளுக்கு மானியம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகளுக்கான மானியத்தை கலெக்டர் வெங்கடாசலம் வழங்கினார். வேளாண்மை இணை இயக்குனர் கார்த்திகேயன், திண்டுக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அருள் அரசு, உதவி வேளாண்மை அலுவலர் ராஜகோபால், அட்மா திட்ட பொருள் சிறப்பு அலுவலர் அருண்குமார் கலந்து கொண்டனர்.

## குறைந்த செலவில் அதிக மகசூலுக்கு மண் பரிசோதனைக்கு ஏற்பாடு

**பெரியகுளம்:** பெரியகுளம் தாலுகா விவசாயிகள், குறைந்த செலவில், அதிக லாபம் பெற பாசனநீர் மற்றும் மண் பரிசோதனை செய்து உரமிடுவதற்கு விவசாயத்துறை ஏற்பாடு செய்துள்ளது.பெரியகுளம் தாலுகாவில் நெல், கரும்பு உட்பட அனைத்து வகையான பயிர்களும் பயிர் செய்யப்படுகிறது. பயிரின் தேவைக்கேற்ப உரமிடுவதற்கும், பயிர்களின் வளர்ச்சிக்கும் மண் உகந்ததா என்பதனை அறிந்து கொள்வதற்கு, மண் மற்றும் பாசனநீரை பரிசோதனை செய்வது அவசியமானதாகும்.விவசாயிகள் பயிரின் தேவைக்கேற்ப உரமிடும்பொழுது, குறைந்த சாகுபடி செலவில் அதிகளவில் மகசூல் பெற்றிடலாம்.மண்ணில் உள்ள தழைச்சத்து, மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களின் அளவினை கணக்கிட்டு, ஓரே சீராக உரமிடலாம். சிக்கனமான முறைகளில் உரங்களை பயிர்களுக்கு இட்டு, உரச்செலவினை குறைந்திடலாம். மண்மாதிரி எடுக்கும் முறைகள்: மண் ஆய்வுக்கு அரைகிலோ மண் மாதிரி எடுத்து கொள்ள வேண்டும். ஒரு பயிர் அறுவடைக்கு பின்பும், அடுத்த பயிருக்கு நிலத்தை தயார் செய்வதற்கும் முன்பும் மண் மாதிரி எடுக்க வேண்டும். கரும்பு, பருத்தி, வாழை பயிர்கள் சாகுபடி செய்வதற்கு, முக்கால் அடி ஆழத்திலும் தென்னைக்கு மூன்று அடி ஆழத்திலும், பழமரங்களுக்கு ஆறு அடி ஆழத்திலும் குழி எடுத்து மண் மாதிரி எடுக்க வேண்டும். மண் மாதிரியுடன் விவசாயிகளின் பெயர், கிரமாம் சர்வே எண், பாசன வசதி, பயிரிடப்பட்ட முன் பயிர், அடுத்து பயிரிடப்போகும் பயிர் ஆகிய விவரங்களை அனுப்பவேண்டும். ஒரு மண் மாதிரிக்கு 5 ரூபாய் செலுத்தி, மண் ஆய்வுக்கூடத்தில், மண் பரிசோதனை செய்து கொள்ளலாம். பாசனநீரையும் சுத்தமான பாட்டிலில் 500 மி.லி.,யை, 10 ரூபாய் செலுத்தி ஆய்வு செய்யலாம்,என விவசாயத்துறை தெரிவித்துள்ளது.

## விளைச்சல் அதிகரிப்பால் வெங்காயம் விலை சரிவு : பொதுமக்கள் ஆனந்த கண்ணீர்

**ஆண்டிபட்டி**:விளைச்சல் அதிகரித்துள்ளதால், சின்ன வெங்காயத்தின் விலை படிப் படியாக குறைந்து வருகிறது. இது பொதுமக்களுக்கு ஆனந்த கண்ணீரை வரவழைத்தாலும், விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர்.

ஆண்டிபட்டி பகுதியில் பாலக்கோம்பை, ராயவேலூர், ராமகிருஷ்ணாபுரம், தெப்பம்பட்டி, ஆவாரம்பட்டி, சேவாநிலையம், சித்தார்பட்டி, ராஜதானி, அணைக்கரைப்பட்டி, வெள்ளையத்தேவன்பட்டி, புள்ளிமான்கோம்பை சொக்கத்தேவன்பட்டி, பின்னத்தேவன்பட்டி உட்பட பகுதிகளில் வெங்காய சாகுபடி அதிக அளவில் உள்ளது. இந்த ஆண்டு வெங்காய விலை வரலாறு காணாத அளவுக்கு <உயர்ந்து கிலோ 80 ரூபாய் கடந்து விற்பனை செய்யப்பட்டது.பொதுமக்கள் பலருக்கு கண்ணீரை வரவழைத்தது.வறட்சியால் பாதிப்பு ஏற்பட்டாலும், இறவை பாசன விவசாயிகள் வெங்காய சாகுபடி செய்வதில் முனைப்பு காட்டி வந்தனர். ஆண்டிபட்டி பகுதியில் விளையும் வெங்காயம் அன்றாடம் மதுரை, ஆண்டிபட்டி காய்கறி மார்க்கெட் மூலம் தமிழகத்தின் பல பகுதிக்கு விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.மூன்று மாதத்திற்கு முன்பு வெங்காயத்தின் விலை உயர்ந்து, விலை உச்சத்திற்கு சென்றதுடன் தட்டுப்பாடும் ஏற்பட் டது. இதனால், ஆந்திரா பகுதியில் இருந்து, வெங்காயம் கொண்டு வரப்பட்டது. தேனி மாவட்டத்திலும், சின்ன வெங்காயத்தின் விளைச்சல் அதிகரித்துள்ளதால், தற்போது வெங்காய விலை படிப்படியாக குறைந்து, கிலோ ரூ.16 முதல் 20 வரை விற்பனை செய்யப்படுகிறது.வெங்காய வியாபாரிகள் கூறியதாவது: தேனி மாவட்டத்தில் இந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால் விவசாயிகள் நெல், கரும்பு, வாழை சாகுபடியை குறைத்து விட்டனர். குறைந்த அளவு கிடைக்கும் தண்ணீரில், 60 நாட்களில் அறுவடைக்கு தயாராகும் வெங்காய சாகுபடியில்,நாட்டம் செலுத்தியதால் விளைச்சல் அதிகரித்துள்ளது.தேனி மாவட்டத்தில் இருந்து தினமும் 25 டன் வெங்காயம் அனுப்பப்படுகிறது. மைசூரு பகுதியில் இருந்து வெங்காய வரத்து துவங்கினால் விலை இன்னும் வீழ்ச்சியடைய வாய்ப்புள் ளது. வெங்காய விலை குறைவு பொதுமக்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுத்தினாலும்,விவசாயிகளுக்கு பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளது.

## தேனியில் நாட்டுக்கோழி பண்ணைகள் அமைக்க அனுமதி

**கம்பம்**: தேனி மாவட்டத்தில்,150 நாட்டுக் கோழி பண்ணைகள் அமைக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது.இதற்கான பணிகளை கால்நடைபராமரிப்புத்துறை முடுக்கி விட்டுள்ளது. பிராய்லர் கோழி பண்ணைகள் அமைக்க விழுப்புரம், கடலூர், அரியலூர், பெரம்பலூர், நெல்லை, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் ஆகிய மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டன.இந்த மாவட்டங்களில், மத்திய, மாநில அரசுகளின் மானியத்தில் 240 பண்ணைகள் அமைக்கப்படுகின்றன. 5000 கோழிகளை, 138 பண்ணைகளிலும், 3000 கோழிகள் 102 பண்ணைகளிலும் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது. நாட்டுக் கோழி பண்ணைகள் அமைக்க திண்டுக்கல்,தேனி, தர்மபுரி, காஞ்சிபுரம், கன்னியாகுமரி, கரூர், கிருஷ்ணகிரி, மதுரை, நாகபட்டினம், புதுக்கோட்டை, ராமநாதபுரம், சிவகங்கை, தஞ்சை, திருவாரூர், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய 16 மாவட்டங்கள் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகிறது.ஒவ்வொரு நாட்டுக் கோழி பண்ணைக்கும் 250 முதல் 500 நாட்டுக் கோழி குஞ்சுகள் வளர்க்க கொடுக்கப்படுகிறது. தேனி மாவட்டத்தில் 150 நாட்டுக் கோழி பண்ணைகள் அமைக்க விண்ணப்பங்கள் பெறப்பட்டு, இறுதி செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பங்கள் இறுதி செய்யப்பட்டு, சம்பந்தப்பட்ட வங்கிகளுக்கு கடன் கொடுக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குநர் பாலகிருஷ்ணன் கூறுகையில், "" தேனி மாவட்டத்தில் பல பகுதிகளில், 150 நாட்டுக் கோழிப்பண்ணைகள் அமைக்கப்படுகிறது. 25 சதவீதம் மானியம் அரசு, 25 சதவீத மானியம் நபார்டு வழங்குகிறது. செட் அமைக்க 1 லட்சத்து 14 ஆயிரம் ரூபாய் செலவாகும். 150 சதுரஅடியில் செட் அமைக்கப்படுகிறது. குஞ்சுகள் சப்ளை செய்யும் நிறுவனங்கள் இறுதி செய்யப்பட்டுவிட்டன. பிப்., மாதத்தில் பண்ணைகள் துவங்கும்,' என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

**தேன்கனிக்கோட்டை பகுதியில் ராகி விளைச்சல் அமோகம் மூட்டை 1500 என விற்பனை**

தேன்கனிக்கோட்டை, : தேன்கனிக்கோட்டை பகுதியில் ராகி விளைச்சல் அதிகரித்ததால் மூட்டைரூ1500ஆகவிலை குறைந்துள்ளது. கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை பகுதியில் மானவாரி பயிரான ராகி அதிகமாக பயிர் செய்யப்படுகிறது. அதில் ஊடுபயிராக சோளம், அவரை, துவரை, ஆமணக்கு, காராமணி ஆகியவை பயிரிடப்படுகிறது. தேன்கனிக்கோட்டை பகுதியில் 12ஆயிரம் ஹெக்டர் பரப்பில் ராகி பயிர் செய்யப்பட்டுள்ளது. இந்த வருடம் உழவு செய்யும் நேரத்தில் போதிய மழை பெய்யாததால் ராகி விதைப்பு பருவம் தவறியே விதைக்கப்பட்டது.

விதைப்புக்கு பின் அவ்வப்போது பயிர் வளர்ச்சிக்கு ஏதுவாக மிதமான மழை பெய்தது. இதில் கடந்த வருடத்தை விட ராகி பயிர் நன்றாக வளர்ந்து கதிர் முற்றிய நிலையில் உள்ளது. தற்போது ஒரு சில பகுதிகளில் ராகி அறுவடை செய்து, பயிர் களத்தில் போர் போட்டு மாடுகள் கட்டி போர் அடித்தும், டிராக்டர் கொண்டு போர் அடித்தும் ராகியை பிரித்து எடுக்கும் பணியில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த வருடம் 100கிலோ கொண்ட ஒரு மூட்டை ராகிரூ1800 முதல் ரூ2 ஆயிரம் வரை விற்பனையானது. இந்த வருடம் ராகி விளைச்சல் அதிகரித்துள்ளதால் மார்க்கெட்டுக்கு ராகி வரத்து அதிகமாகி மூட்டை ரூ1500 ஆக விலை குறைந்துள்ளது.

**திருவெறும்பூரில் பயறுவகை சாகுபடி முன்பருவ முனைப்பு முகாம்**

திருவெறும்பூர், : திருவெறும்பூர் அருகே உள்ள கிளியூரில் சிறப்பு மனுநீதி நாள் முகாம், வேளாண்மை விரிவாக்க மையம் சார்பில் பயறுவகை சாகுபடி முன்பருவ முனைப்பு முகாம் நடந்தது. தாசில்தார் மஞ்சுளா தலைமை வகித்தார். கிளியூர் ஊராட்சி தலைவர் இலக்கியா முன்னிலை வகித்தார். திருவெறும்பூர் வேளாண்மை உதவி இயக்குனர் சரவணன் பேசியதாவது: போதிய தண்ணீர் இல்லாத காரணத்தால் இந்த ஊரில் நெல் நடவு மட்டுமே பல ஆண்டுகளாக செய்யப்பட்டு வருகிறது. தற்போது கிளியூர் கிராமத்தில் உள்ள பொதுப்பணித்துறை குளத்தில் மேலும் 60 நாட்களுக்கு தண்ணீர் உள்ளதால் நெல் நஞ்சை தரிசில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி விவசாயிகள் உளுந்து சாகுபடி செய்து பயனடைய வேண்டும் என்றார்.

விழாவில் நமது பாரம்பரிய வேளாண் பொருட்களான இளநீர், சிகைக்காய், பருத்தி மற்றும் சிறு குறு தானியங்கள் பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

முன்னதாக கிளியூரில் நடந்த முகாமில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை சமூக பாதுகாப்பு திட்ட பணி தாசில்தார் சுமதி வழங்கினார். வட்ட வழங்கல் அலுவலர் சத்தியபாமா, வேங்கூர் வருவாய் ஆய்வாளர் திருமகள் மற்றும் விஏஓ மணிமாறன், வேளாண்மை அலுவலர் கவிதா, உதவி வேளாண்மை அலுவலர் அமல்ராஜ், ஹேமா ஆகியோர் கலந்து கொண்டனர்.

**இயற்கை வேளாண் முறையில் உற்பத்தி செய்யப்படும் பொருளுக்கு சான்று அவசியம்கருத்தரங்கில் தகவல்**

திருத்துறைப்பூண்டி, : திருத்துறைப் பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கிரியேட் டி.இ.டி.இ டிரஸ்ட், சோழ மண்டல இயற்கை வேளாண் உற்பத்தி மற்றும் விற்பனை கம்பெனி லிமிடெட் சார்பில் இயற்கை வேளாண்மையில் உணவு உற்பத்தி செய்யும் விவசாயிகள் சான்று பெறும் வழிமுறை குறித்து கருத்தரங்கம் நடைபெற்றது. குடும்ப நிறுவனத்தின் துணை இயக்குநர் சுரேஷ் கண்ணா தலைமை வகித்தார்.

சோழ மண்டல இயற்கை வேளாண் உற்பத்தி பிரதிநிதி பட்டீஸ்வரம் பாஸ்கர் முன்னிலை வகித்தார். நமது நெல்லை காப்போம் மாநில ஒருங்கிணைப்பாளர் ஜெயராமன் வரவேற்றார்.

கருத்தரங்கில் கீஸ்டோன் பவுன்டேசன் அமைப்பின் தேசிய கவுன்சில் உறுப்பினர் சாம்ராஜ் பேசுகையில், இயற்கை விவசாயம் ஆண்டுக்காண்டு அதிகரித்து வருகிறது. அவ்வாறு உற்பத்தி செய்யும் விளை பொருட்களை நுகர்வோரிடம் நேரிடையாக விற்பனை செய்யும்போது இயற்கை விவசாயம் சான்று அவசியமாகிறது. சான்று இல்லாததால் உழவர்கள் இயற்கை விளைபொருட்களை குறைந்த விலைக்கே விற்பனை செய்ய வேண்டியுள்ளது. இந்த நிலையில் கீஸ்டோன் பவுண்டேசன் நிறுவனம் மத்திய அரசோடு இணைந்து சான்று வழங்குகிறது.  ரசாயன உரம், பூச்சி கொல்லி பயன்படுத்தும் விவசாயிகள் வயல்வழியாக தண்ணீர் பாய்ச்ச கூடாது.  கிராமங்களில் இயற்கை விவசாயிகள் குழுவாக அமைத்துக் கொண்டு ஒருவருக்கொருவர் வயல்களை கண்காணிக்க வேண்டும். இந்த சான்று மூலம் அரசு நலத்திட்டங்களையும், நபார்டு மூலம் உதவிகளையும் பெற முடியும் என்றார்.

கருத்தரங்கில் நன்னிலம், திருவாரூர், திருமருகல், குடவாசல், திருத்துறைப்பூண்டி பகுதிகளில் குழுக்கள் ஒன்றிய அளவில் அமைக்கப்பட்டது. முடிவில் டி.இ.டி.இ அமைப்பை சேர்ந்த பாஸ்கர் நன்றி கூறினார்.

## 300 மூட்டை நெல் இருந்தால் வீடு தேடி வந்து கொள்முதல்



திருவாரூர் : 300 நெல் மூட்டைகளுக்கு மேல் நெல் இருந்தால் வீட்டுக்கே வந்து கொள்முதல் செய்யப்படும் என்று திருவாரூர் கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்ப தாவது:திருவாரூர் மாவட்டத்தில் நடப்பு காரிப் பருவத்தில் 427 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு அதன் மூலம் கடந்த 30ம் தேதி வரை ஒரு லட்சத்து 33 ஆயிரத்து 686 மெ.டன் நெல் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகளின் நலன் கருதி 300 மூட்டைகளுக்கு மேல் விற்பனை செய்வதற்காக இருப்புவைத்திருந்தால், அவர்கள் நெல் மூட்டைகள் வைத்துள்ள இடத்திற்கே நேரில் சென்று கொள்முதல் செய்யப்படும். இதற்காக மாவட்டம் முழுவதும் உள்ள 7 தாலுகாவிலும் தலா ஒரு நடமாடும் கொள்முதல் நிலையம் செயல்பட்டு வருகிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கொங்கணாபுரத்தில் 25 ஆயிரம் மூட்டை பருத்தி ரூ.3.75 கோடிக்கு விற்பனை**



இடைப்பாடி : கொங்கணாபுரத்தில் 25 ஆயிரம் மூட்டை பருத்தி, ரூ.3.75 கோடிக்கு விற்பனையானது.சேலம் மாவட்டம், கொங்கணாபுரம் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று முன்தினம் பருத்தி ஏலம் நடைபெற்றது. இதில் பெங்களூர், கிருஷ்ணகிரி, ஓசூர், தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, திருவண்ணாமலை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து

ஏராளமான விவசாயிகள், வியாபாரிகள் கலந்து கொண்டனர். மொத்தம் 25 ஆயிரம் மூட்டை பருத்தி விற்பனைக்கு வந்தது.டிசிஎச் ரகம் குவிண்டால் ரூ.6 ஆயிரத்து 950 முதல் ரூ.7 ஆயிரத்து 650 வரை விற்பனையானது. பிடி ரகம் குவிண்டால் ரூ.4 ஆயிரத்து 900 முதல் ரூ.5 ஆயிரத்து 950 வரை விலை போனது. மொத்தம் 25 ஆயிரம் மூட்டை பருத்தி, ரூ.3.75 கோடிக்கு விற்பனையானது.

**1,500 மூட்டை மஞ்சள் ரூ.60 லட்சத்திற்கு ஏலம்**



திருச்செங்கோடு : திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.60 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது.திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு 1,500 மூட்டை மஞ்சள் விற்பனைக்கு வந்தது. ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் மஞ்சளைக் கொண்டு வந்திருந்தனர்.மஞ்சளை வாங்க ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து ஏராளமான வியாபாரிகள் வந்திருந்தனர். இதில், ஏலம் மூலம் ரூ.60 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7,100 முதல் ரூ.8,309 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.6,510 முதல் ரூ.7,109 வரை விலைபோனது. பனங்காளி ரகம் ரூ.9,500 முதல் ரூ.11,500 வரை விற்பனையானது. மஞ்சளுக்கு கூடுதல் விலை ரூ.1,000 முதல் ரூ.1,500 வரை கிடைத்தது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**பூண்டி ஏரிக்கு 19 நாளில் 2 டி.எம்.சி. கிருஷ்ணா நதி நீர்**



**ஊத்துக்கோட்டை,**

பூண்டி ஏரிக்கு 19 நாளில் 2 டி.எம்.சி. கிருஷ்ணா நதி நீர் கிடைத்துள்ளது.

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டம்

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி நெல்லூர் அருகே உள்ள கண்டலேறு அணையில் இருந்து பூண்டிக்கு தண்ணீ¢ர் திறந்து விடப்பட்டது. கண்டலேறு அணையில் இருந்து முதலில் வினாடிக்கு 500 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. தற்போது வினாடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் திறந்து விடப்படுகிறது. பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. நேற்று காலை 9 மணி நிலவரப்படி நீர் மட்டம் 20.03 அடியாக பதிவானது. 254 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

ஏரிக்கு கிருஷ்ணா நதி நீர் வினாடிக்கு 273 கனஅடி விதம் வந்து கொண்டிருக்கிறது. நீர் வரத்து அதிகரித்து உள்ளதால் பூண்டி ஏரியின் மட்டம் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

கடந்த 13-ந் தேதி 17.66 அடியாக இருந்த நீர் மட்டம் படிப்படியாக அதிகரித்து நேற்று 20.03 அடியாக உயர்ந்துள்ளது. அதாவது கடந்த 13-ந் தேதி முதல் நேற்று காலை வரை பூண்டி ஏரிக்கு 2.124 டி.எம்.சி. கிருஷ்ணா நீர் வந்து சேர்ந்துள்ளது.

12 டி.எம்.சி. தண்ணீர்

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை 8 டி.எம்.சி. தண்ணீரையும் ஜூலை மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை 4 டி.எம்.சி. தண்ணீரையும் ஆந்திர அரசு தமிழ்நாட்டுக்கு திறந்து விடவேண்டும் என்பது குறிப்பிட தக்கது.

**வேலூர் மாவட்டத்தில் 1,400 பயனாளிகளுக்கு விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன கலெக்டர் நந்தகோபால் தகவல்**



**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் 1,400 பயனாளிகளுக்கு ரூ.6 கோடி மதிப்பில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன என்று கலெக்டர் நந்தகோபால் தெரிவித்தார்.

## விலையில்லா கறவை மாடுகள்

தமிழக அரசின் விலையில்லா கறவை மாடுகள் வழங்கும் திட்டத்தில் மொத்தம் 60 ஆயிரம் கறவை மாடுகள், ஆண்டுக்கு 1,200 வீதம் 5 ஆண்டுகளில் வழங்கும் பணி நடைபெற்று வருகிறது.

ஒரு கறவை மாட்டுக்கு அதிகபட்சம் ரூ.30 ஆயிரம் தொகை ஒதுக்கீடு செய்து, அதில் 5 சதவீதமான ரூ.1,500 காப்பீடு பிரிமியமாக செய்யப்படுகிறது. குறைவான பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் உள்ள மாவட்டங்களில் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் இல்லாத சிறிய கிராமமாக தலைமை அலுவலகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ள கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இந்த திட்டத்தில் முதல் அல்லது 2–வது கன்று ஈன்ற ஜெர்சி கலப்பின கறவை மாடுகள் மட்டும் (வயது 5 ஆண்டுகளுக்கு மிகாமல்) நமது மாவட்டத்தில் வழங்கப்படும்.

## பயனாளிகள் தேர்வு

குடும்பத்தில் உள்ள பெண்கள் மட்டும் பயனாளிகளாக தேர்வு செய்யப்பட வேண்டும். விதவைகள், மாற்று திறனாளிகள், கணவனால் கைவிடப்பட்டவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. வயது 18–க்கு மிகாமலும் 60–க்குள்ளும் இருக்க வேண்டும். தீவனப்பயிர் செய்ய அவருடைய பெயரிலோ அல்லது குடும்பத்தினர் பெயரிலோ நிலம் ஒரு ஏக்கருக்கு மிகாமல் இருக்க வேண்டும். ஆனால் நிலம் இருக்க வேண்டிய கட்டாயமில்லை. பயனாளியோ, அவரது குடும்பத்தினரோ மத்திய, மாநில அரசு, ஏதாவது நிறுவனங்கள், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணியில் இருக்க கூடாது. அதே கிராமத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.

பயனாளிகளை தேர்வு செய்ய கிராம அளவிலான தேர்வுக்குழு அமைக்கப்படும். விண்ணப்பங்களை தேர்வுக்குழு உறுப்பினர்களிடமோ அல்லது கிராம பஞ்சாயத்தில் வழங்கலாம். பயனாளிகளின் இறுதி பட்டியல் ஊராட்சி மன்ற அறிவிப்பு பலகையிலும், பொது இடங்களிலும் வைக்கப்படும். கறவை மாடுகள் வழங்கிய பின்னர் கால்நடை உதவி இயக்குனர் கறவை மாடுகளுக்கான அடையாள அட்டை வழங்கவேண்டும். மாதம் ஒருமுறை கறவை மாடுகளை பார்வையிட்டு குடற்புழு நீக்கம், தடுப்பூசி போன்ற மருத்துவ உதவிகளை கால்நடை உதவி டாக்டர்கள், ஆய்வாளர்கள் அளிக்க வேண்டும்.

1,400 பயனாளிகள்

வேலூர் மாவட்டத்தில் 2011–12–ம் ஆண்டு 650 பயனாளிகளுக்கும், 2012–13–ம் ஆண்டில் 650 பயனாளிகளுக்கும், 2013–14–ம் ஆண்டில் 100 பயனாளிகளுக்கும் என மொத்தம் 1,400 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 18 லட்சம் மதிப்பில் விலையில்லா கறவை மாடுகள் வழங்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தகவலை கலெக்டர் நந்தகோபால் தெரிவித்துள்ளார்.

**கோழிப்பண்ணையாளர்கள் குடிநீரை பரிசோதித்து கிருமி நாசினி கலக்க வேண்டும் ஆராய்ச்சி நிலையம் தகவல்**

**நாமக்கல்**, கோழிப் பண்ணையாளர் கள் குடிநீரில் நோய்க் கிருமிகள் உள்ளனவா? என பரிசோதனை செய்து, அதற்கேற்றபடி கிருமிநாசினி கலக்க வேண்டும் என நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது.

ஆராய்ச்சி நிலையம்

நாமக்கல் மாவட்டத்தில் அடுத்த 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து நாமக்கல் கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறப் பட்டு உள்ளதாவது:-

அடுத்த 3 நாட்கள் வானம் லேசான மேக மூட்டத்துடன் காணப் படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று முறையே 3, 3, 3 கி.மீ. வேகத்தில் தென் கிழக்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக 91.4 டிகிரியாகவும், குறைந்த பட்சமாக 66.2 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 77, 79, 83 சதவீதமாகவும், குறைந்த பட்சமாக முறையே 43, 46, 48 சதவீதமாகவும் இருக்கும்.

<u>சிறப்பு வானிலை</u>

இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கான நாமக்கல் மாவட்ட சிறப்பு வானிலையில் வானம் லேசான மேக மூட்டத்துடன் மழையற்று காணப்படும். காற்றின் ஈரப்பதம் 40 - 83 சதவீதமாக நிலவும். அடுத்த 3 நாட்களுக்கான வானிலையில் பின் பனிக் காலம் தொடங்கியுள்ள நிலை யில் கோடை வெப்பத்தை கோழிகள் திறம்பட எதிர்கொள்ள முட்டையிட தயாராக உள்ள புல்லட் கோழிகளின் உடல் எடை சீராக இருப்பது மிக அவசியம். சீரான எடையற்ற கோழிகளில் கோடை வெப்பம் உயர உயர முட்டையின் எண்ணிக்கையும், எடையும் வெகுவிரைவில் குறைவது மட்டுமல்லாமல் வெப்ப அதிர்ச்சியில் இறக்க நேரிடுவதும் அதிகமாகும். ஆகவே கோடைக்கான புல்லட் கோழிகளின் எடை கவனிக்கப்பட வேண்டிய தாகும்.

<u>கோழியின நோய் ஆய்வகம்</u>

கடந்த வாரம் கோழியின நோய் கண்டறிதல் மற்றும் கண்காணிப்பு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட கோழி கள் பெரும்பாலும் ஈகோலை மற்றும் மேல்மூச்சுக் குழாய் நோய்களினால் இறந்திருப்பது தெரியவந்து உள்ளது. ஆகவே பண்ணையாளர்கள் குடிநீரில் நோய்க்கிருமிகள் உள்ளனவா ? என பரி சோதனை செய்து அதற்கேற்ற படி கிருமிநாசினி கலக்குமா றும், மேலும் கோழிக் கொட்டகை சுகாதாரத்திற்கு வாரம் ஒரு முறை கிருமிநாசினி கொண்டு தெளித்து நோய்க் கிருமிகள் இல்லாதவாறு இருக்க வேண்டும் என அறி வுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**காதலர் தினத்துக்கு தயாராகும் கொய்மலர்கள்**



காதலர் தினம் வருகிற 14–ந் தேதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி கொய்மலர்களுக்கு கிராக்கி ஏற்பட்டு உள்ளது. ஊட்டி ஏரிமுனை பகுதியில் பயிரிடப்பட்டுள்ள கொய்மலர்களை பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள ஊழியர்களை படத்தில் காணலாம்.

**சின்னக்கல்லார் அணையில் இருந்து கேரளாவுக்கு தண்ணீர் திறப்பது நிறுத்தம் சோலையாரில் மீண்டும் மின் உற்பத்தி**



**வால்பாறை,**

சின்னக்கல்லார் அணை யில் இருந்து கேரளா வுக்கு தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது. மேலும் சோலையார் மின் நிலையம்–1ல் மீண்டும் உற்பத்தி தொடங்கப் பட்டுள்ளது.

<u>பருவ மழை</u>

வால்பாறையில் பரம்பிக் குளம்–ஆழியாறு திட்டத்தின் அடிப்படை அணைகளான சோலையார்அணை, சின்னக் கல்லார் அணை, நீரார் அணை ஆகிய அணைகள் உள்ளன. இந்த அணைகளுக்கு தண்ணீர் வால்பாறை பகுதி யில் பெய்யும் பருவமழை மூலமே கிடைத்து வருகிறது.

தண்ணீரை கொண்டு சோலையாரில் 2 மின் நிலையங்கள் இயக்கப்பட்டு 95 மெகாவாட் மின் உற்பத்தி செய்யப்படுகிறது. அதேபோல் மின் உற்பத்திக்குப்பின் வெளியாகும் உபரி தண்ணீர் குடிநீர், விவசாயத்துக்கு பயன்படுத்தப்படுகிறது.

<u>தண்ணீர் திறப்பது நிறுத்தம்</u>

இது தவிர தமிழக–கேரள நதிநீர் பங்கீடு ஒப்பந்தப்படி ஆண்டு தோறும் 12.5 டிஎம்சி தண்ணீர் கேரளாவுக்கு வழங்கப்படுகிறது. மேலும் சின்னக்கல்லார் அணையில் இருந்து ஆண்டு தோறும் அக்டோபர் மாதம் 1–ந் தேதி முதல் ஜனவரி 31–ந் தேதி வரை சின்னக்கல்லார் அணைக்கு வரும் தண்ணீர் முழுவதையும் கேரள வனப் பகுதிகளில் உள்ள வனவிலங்கு களின் தேவைகளுக்காகவும், வனப்பகுதிகளின் செழிப்பிற் காக வும் திறந்துவிடப்படுகிறது.அதன்படி கடந்த 4 மாதங் களாக திறந்துவிடப்பட்ட தண்ணீர் நேற்று முதல் நிறுத்தப்பட் டது.

அதேபோல் சோலையார் அணையில் இருந்து மின் நிலையம் –2 இயக்கப்பட்டு மின் உற்பத்திக்குப்பின் வெளி யாகும் தண்ணீர் ஒப்பந்தப்படி கேரளாவிற்கு திறந்து விடப் பட்டு வந்தது. அந்த தண்ணீரும் நேற்றுமுதல் நிறுத்தப்பட்டது. இதனால் மின்நிலையம் 2 நிறுத்தப் பட்டதை தொடர்ந்து நேற்று சோலையார் மின் நிலையம்–1ல் உள்ள ஒரு மோட்டார் மட்டும் இயக்கப்பட்டு 35 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப் படுகிறது. இதில் இருந்து வெளியேறும் தண்ணீர் பரம்பிக்குளம் அணைக்கு திறந்து விடப்பட்டு உள்ளது.

<u>10 நாட்கள் மட்டுமே மின் உற்பத்தி</u>

மேலும் சின்னக்கல்லார் அணையில் இருந்து கேரளா விற்கு தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டதால், சோலையார் அணைக்கு நேற்று முதல் டனல் வழியாக, தண்ணீர் திறந்து விடப்பட்டது. இருந்த போதும் சோலையார் அணையில் தற்போது 56.35 அடிதண்ணீர் மட்டுமே உள்ளது. இந்த தண்ணீர் இன்னும் 10 நாட்களுக்கு மட்டுமே மின்உற்பத்திக்கு போதுமானதாக இருக்கும் நிலை உள்ளது. வறட்சி காரணமாக சோலையார் அணையின் நீர்பிடிப்பு பகுதி களில் தண்ணீர் இல்லாத நிலையே காணப்படுகிறது.

**அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காததால் நெற்பயிர்கள் சாய்ந்து வரும் அவலம் விவசாயிகள் கவலை**

**கபிஸ்தலம்,**

கபிஸ்தலம் பகுதியில் அறுவடைக்கு ஆட்கள் கிடைக்காததால் நெற்பயிர்கள் சாய்ந்து வரும் அவலநிலை ஏற்பட்டுள்ளது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>தாளடி நெற்பயிர்கள்</u>

தஞ்சை மாவட்டம் கபிஸ்தலம் பகுதியில் கபிஸ்தலம், மேலகபிஸ்தலம், சருக்கை, மேட்டுத்தெரு, இளங்கார்குடி, நாயக்கர்பேட்டை, வன்னியடி, உம்பாளப்பாடி, கருப்பூர், ராமனுஜபுரம், உமையாள்புரம், அண்டக்குடி, சத்தியமங்கலம், வாழ்க்கை, நக்கம்பாடி, திருமணடங்குடி, கூனஞ்சேரி, தியாகசமுத்திரம், அலவந்திபுரம் உள்ளிட்ட 100–க்கும் மேற்பட்ட கிராமங்களில் சுமார் ஆயிரம் ஏக்கர் நிலபரப்பில் தாளடி நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது இந்த நெற்கதிர்கள் முற்றி அறுவடைக்கு தயாராக உள்ளன. தற்போது வயல்களில் ஈரப்பதம் குறைந்து வருகிறது.

<u>அறுவடை</u>

முழுமையாக ஈரப்பதம் குறைந்தால் தான் எந்திரங்களை வைத்து அறுவடை செய்ய முடியும். அப்படி எந்திரங்களை வைத்து அறுவடை செய்யும் போது வைக்கோல் முழுமையாக வந்து சேருவது இல்லை.

இதனால் கால்நடைகளுக்கு வைக்கோல் கிடைக்காமல் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. மேலும் நெற்பயிர்களை அறுவடை செய்ய தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதற்கு ஒவ்வொரு கிராமத்தில் இருந்தும் நூறு நாள் வேலை பணிக்கு தொழிலாளர்கள் சென்று விடுவதே காரணம்.

இதனால் வயல்களில் அறுவடை செய்ய ஆட்கள் பற்றாக்குறை ஏற்பட்டு நெற்கதிர்கள் சாய்ந்து வருகின்றன. மேலும் அறுவடை செய்யும் நெல்லை கொள்முதல் நிலையங்களுக்கு கொண்டு செல்ல பல்வேறு இடங்களில் நெல் கொள்முதல் நிலையங்களை புதிதாக திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நவீன உத்திகளை கையாண்டால் விவசாயம் செழிக்கும் கலெக்டர் நடராசன் பேச்சு**



**கோட்டூர்,**

நவீன உத்திகளை கையாண்டால் விவசாயம் செழிக்கும் என்று கலெக்டர் நடராசன் கூறினார்.

<u>சொட்டு நீர்ப்பாசனம்</u>

திருவாரூர் மாவட்டம் கோட்டூர் அருகே உள்ள சேரி ஊராட்சி மேலகண்டமங்கலம் கிராமத்தில், முன்னோடி விவசாயி காவேரிரெங்கநாதன் தனது வயலில் சொட்டு நீர்ப் பாசனத்தில் நெல் சாகுபடி செய்து இருந்தார். டெல்டா மாவட்டத்தில் முதல் முறை யாக சொட்டு நீர்ப்பாசனம் முறையில் சாகுபடி நடைபெற்ற இந்த வயலில் அறுவடை பணி களை திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராஜன் தொடங்கி வைத்தார். அதை தொடர்ந்து விவசாயி களுடனான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்தில் திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் பேசினார். அப்போது அவர் கூறிய தாவது:-

<u>செழிக்க வைக்க முடியும்</u>

விவசாயிகள் விவசாய பணி களில் அறிவியல் சாதனங் களையும், நவீன உத்திகளையும் கையாண்டால் விவசாயத்தை செழிக்க வைக்க முடியும். இயல்பாகவே இயற்கை செல் வம் நிறைந்த திருவாரூர் மாவட்டத்தில் முள்ளியாறு தலைப்பில் தொடங்கி அரச லாறு வரை பல்வேறு ஆறுகள் ஓடுகின்றன. இந்த ஆறுகளில் நீர் செறிவூட்டல் திட்டத் தாலும், குளங்களில் மழைநீர் சேகரிக்க ஆழ்குழாய் கிணறு அமைத்ததாலும் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டில் குறைந்த அளவே மழை பெய்து இருந்தாலும் நெல் மகசூல் அதிகரித்துள் ளது.

<u>ஆராய்ச்சி</u>

ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் டெல்டா மாவட்டங்களில் நெல் வயல்களில் சொட்டு நீர்ப்பாசன முறையில் சாகு படி செய்வது பற்றிய

ஆராய்ச்சிகள் நடைபெற்று வரும் நிலையில் இந்த கிராமத்தில் “பி.பி.டி. 5204” என்ற ரக நெல்லை சொட்டு நீர்ப் பாசனம் முறையில் பயிரிட்டு வெற்றிகரமாக அறுவடை செய்து இருக்கிறோம். இத் திட்டத்தின் மூலம் உணவு உற் பத்தியை அதிகரிப்பதுடன் நீர், மின்சாரத்தை 60 சதவீதம் சேமிக்கலாம்.

காய்கறி பயிர்கள்

கோடை காலங்களில் சொட்டு நீர்ப்பாசன முறையை பின்பற்றி 2 முறை நெல்லும் ஒரு முறை பயறு அல்லது காய்கறிகளையும் பயிர் செய் யலாம். இந்த முறையை சிறு, குறு விவசாயிகள் பயன்படுத் திக் கொண்டால் பொருளா தாரம் மேம்படும். இவ்வாறு அவர் கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட வேளாண்மை துறை இயக் குனர் மயில்வாகனன், வேளாண்மை ஆராய்ச்சி மைய பேராசிரியர் காமராஜ், உதவி இயக்குனர்கள் சிவக் குமார். உத்திராபதி, இளஞ்செழியன், தாசில்தார் ரெங்க சாமி, ஊராட்சி மன்ற தலைவர் கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**திருவாரூர் மாவட்டத்தில் 1 லட்சம் டன் நெல் கொள்முதல் அதிகாரி தகவல்**

**திருவாரூர்,**

திருவாரூர் மாவட்டத்தில் 1 லட்சம் மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய் யப்பட் டுள்ளதாக தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக்கழக திருவா ரூர் மண்டல முதுநிலை மேலாளர் அழகிரிசாமி கூறினார். இதுதொடர்பாக அவர் ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் கூறி யிருப்பதாவது:-

நடப்பு பருவம்

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திருவாரூர் மண்டலத்தில் நடப்பு ஆண்டு (2013-2014) கொள்முதல் பருவத்தில் 427 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள்

திறக்கப்பட்டன. இந்த கொள் முதல் நிலையங்கள் மூலமாக 1 லட்சத்து 33 ஆயிரத்து 686 மெட்ரிக் டன் நெல்கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் விவசாயிகளின் நலன் கருதி, 300 மூட்டைகளுக்கு மேல் விற் பனை செய்ய வரும் விவ சாயிகளுக்கு, நேரடியாக களத் திற்கே சென்று நெல் கொள் முதல் செய்ய வட்டத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் 7 நடமாடும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் இயங்கி வருகின்றன.

பதிவு செய்து கொள்ளலாம்

திருவாரூர், நன்னிலம், குடவாசல், வலங்கைமான் ஆகிய வட்டார பகுதிகளைச் சேர்ந்த 300 மூட்டைகளுக்கு மேல் நெல் மூட்டைகள் இருப்பு வைத்துள்ள விவசாயிகள் திருவாரூர் அலகு துணை மேலாளரை தொடர்பு கொண்டு நெல் மூட்டைகள் விற்பனை குறித்த விவரங்களை பதிவு செய்து கொள்ள வேண் டும்.

மன்னார்குடி, நீடாமங்கலம், திருத்துறைபூண்டி ஆகிய வட்டார பகுதிகளைச் சேர்ந்த 300 மூட்டைகளுக்கு மேல் நெல் இருப்பு வைத்துள்ள விவசாயி கள் மன்னார்குடி அலகு துணை மேலாளரை தொடர்பு கொண்டு, விற்பனை குறித்த விபரங்களை உரிய பதிவேட்டில் பதிவு செய்து கொள்ளலாம்.

புகார்களுக்கு...

நடமாடும் நெல்கொள்முதல் நிலையங்கள் மூலம் நெல் விற் பனை செய்ய வரும் முன் னோடி விவசாயிகளுக்கு பதிவு முன்னுரிமை அடிப் படையில் நெல்கொள்முதல் செய்யப்படும். நெல் கொள் முதல் தொடர்பான புகார் களுக்கு திருவாரூர் அலகு துணை மேலாளரை 984067 7948 என்ற செல்போன் எண் ணில் தொடர்பு கொள்ளலாம். மன்னார்குடி அலகு துணை மேலாளரை 9443075277 என்ற எண்ணிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளரை 9442255542 என்ற எண்ணிலும் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

**நத்தத்தில் மாங்காய் விளைச்சல் குறையும் அபாயம்? விவசாயிகள் கவலை**



**நத்தம்.**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் பகுதியில் மாந்தோப்புகள் அதிகளவில் உள்ளன. இந்த தோப்புகளில் மாங்காய் விளைச்சலை அதிகரிக்கும் நோக்கில் மருந்து தெளிக்கும் பணியில் விவசாயிகள் ஆண்டுதோறும் ஈடுபடுவார்கள். அதே போன்று கடந்த ஆண்டு இறுதியிலும் விவசாயிகள் மருந்து தெளிக்கும் பணியில் ஈடுபட்டனர். ஆனால் கடந்த ஆண்டு பருவமழை பொய்த்து போனதால் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. ஜனவரி மாதம் தொடங்கினாலே மாமரங்கள் பூக்கும் நிலையை எட்டும். ஆனால் இந்த ஆண்டு போதிய தண்ணீர் வசதி இன்றி ஜனவரி மாதம் கடைசி வாரத்தில் தான் மாமரங்கள் பூக்க தொடங்கியது. இதுகுறித்து தென்னை,மாந்தோப்புகளின் விவசாய சங்க தலைவர் வேம்பார்பட்டி கண்ணுமுகமது கூறும் போது,'கடந்த ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை போதிய அளவு பெய்யாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து காணப்பட்டது. தற்போது நத்தம் மற்றும் சாணார்பட்டி ஒன்றிய பகுதியில் ஆயிரக்கணக்கான ஏக்கர் மாமரங்கள் வறட்சியின் பிடியில் சிக்கி உள்ளது. இதில் ஒருசில தோப்புகளில் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் தண்ணீர் எடுத்து மா மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்சி வந்தோம். அப்படிபட்ட மரங்களும் ஈரப்பதம் நிறைந்த மரங்களும் தற்போது பூப்பூக்க தொடங்கி உள்ளது. இதனால் சுமார் 60 சதவீத மரங்களுக்கு மேல் பூக்காமல் உள்ளதால் விவசாயிகள் கவலை அடைந்து உள்ளனர்'என்றார்.

**ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம் லாபகரமானது பண்ணைப்பிரிவு அதிகாரி தகவல்**

**மதுரை,**

தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்து வரும் நிலையில் விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்த பண்ணையம் அமைப்பதன் மூலம் ஆண்டு முழுவதும் சுழற்சி முறையில் வருமானம் பெறலாம் என்று இந்தியன் வங்கியின் பண்ணைப்பிரிவு அதிகாரி கேட்டுக் கொண்டார்.

பற்றாக்குறை

வேளாண் மற்றும் கால்நடை பட்டதாரிகளுக்காக வேளாண் அமைச்சகத்தின் சார்பில் வழங்கப்படும் அக்ரி கிளினிக் பயிற்சி வழங்கப்படுகிறது. 2 மாத கால அளவிலான இந்த பயிற்சியை நிறைவு செய்த பட்டதாரிகளுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்ச்சி மதுரை சொக்கிகுளத்தில் உள்ள வாப்ஸ் மையத்தில் நடைபெற்றது. விழாவில் இந்தியன் வங்கியின் பண்ணைப் பிரிவு முதன்மை மேலாளர் டி.கிருஷ்ணதாஸ் கலந்து கொண்டு பேசினார். அவர் பேசுகையில், ' சமீபகாலமாக வேளாண் தொழில்களில் ஈடுபடும் பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. பண்ணை தொழில்களை தொடங்க விரும்புபவர்கள் தங்கள் கைவசம் இருக்கும் சிறிய முதலீட்டை கொண்டு தொழில்களை தொடங்குவதுடன், தங்களது பண்ணை அருகில் இருக்கும் விவசாயிகளுடன் தொடர்புகளை வளர்த்துக் கொள்வதன் மூலம் அந்த தொழிலில் நல்ல அனுபவத்தை பெறலாம்.


இதன் பின்னர் வங்கிகளை அணுகி தங்களது திட்ட அறிக்கையை சமர்பித்து கடனுதவி பெற முடியும். கூடவே, வேளாண் தொழில்களுக்கு நபார்டு வங்கி வழங்கும் மானியத்தையும் பெற்று பலனடையலாம். தற்போது தண்ணீர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. இந்த சூழ்நிலையில் விவசாயிகள் பல்வேறு பயிர்கள், கால்நடைகள், பண்ணைக் கழிவுகளை கொண்டு இயற்கை உரம் தயாரிப்பது போன்ற ஒருங்கிணைந்த பண்ணையத்தை அமைக்கலாம். இது

போன்ற பண்ணையம் ஆண்டு முழுவதும் சுழற்சி முறையில் வருமானத்தையும், லாபத்தையும் தரக்கூடியது. விவசாயிகள் அனைவரும் ஒருங்கிணைந்த பண்ணையத்தை தொடங்க முன்வர வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்கள்

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மதுரை வேளாண்மைக் கல்லூரி முதல்வர் சின்னுச்சாமி பேசும் போது கூறியதாவது:- தகவல் தொழில்நுட்பத்தை நோக்கி சென்ற பட்டதாரிகள் கூட தற்போது வேளாண்மையை நோக்கி திரும்புகிறார்கள். வேளாண் தொழில்களில் ஈடுபட விரும்புபவர்கள் மதிப்புக் கூட்டப்பட்ட விவசாய உற்பத்தி பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்தினால் அதில் நல்ல லாபம் பெறலாம். இவ்வாறு அவர் பேசினார். முன்னதாக, நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களை வாப்ஸ் தொழில்நுட்ப ஆலோசகர் சுப்பிரமணியன் வரவேற்றார். முடிவில் செயல் அலுவலர் எஸ்.ஏ.அருள் நன்றி கூறினார்.

**மாவட்டம் முழுவதும் உரக்கடைகளை ஆய்வு செய்ய கண்காணிப்பு குழு நியமனம்**



ராமநாதபுரத்தில் உரக்கடையில் கண்காணிப்புகுழு ஆய்வு செய்தபோது எடுத்தபடம்.

**ராமநாதபுரம்,**

மாவட்டம் முழுவதும் உரக்கடைகளை ஆய்வு செய்ய கண்காணிப்பு குழு நியமனம் செய்யப் பட்டுள்ளது.

உரம் இருப்பு

ராமநாதபுரம் மாவட்டத் தில் மொத்த சாகுபடி பரப்பு 1 லட்சத்து 71 ஆயிரத்து 578 எக்டேராகும். இதில் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்கு தேவையான ரசாயன உரங்க ளின் தேவையை கணக் கிட்டு தனியார் மற்றும் தொடக்க கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதுநாள் வரை தனியார் மற் றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் யூரியா-4,714 டன்னும், டிஏபி -982 டன்னும், பொட்டாஷ் -428 டன்னும், கூட்டு உரங் கள்-2,242 டன்னும் விற் பனை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு சாகுபடி செய்துள்ள பயிர்களுக்கு தேவையான உரங்கள் யூரியா-1,638 டன் னும், டிஏபி- 1,252 டன்னும், பொட்டாஷ்-189 டன்னும், கூட்டு உரங்கள்- 1,283 டன்னும் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு தேவையான உரங்கள் குறித்த காலத்தில் கிடைத்திடவும், தரமான உரங்கள் கிடைத்திடவும் வேளாண்மை துறையின் மூலமாக பல்வேறு நடவடிக் கைகள் எடுக்கப்பட்டு வருகி றது. நடப்பு ஆண்டில் விவசா யிகளுக்கு அரசு நிர்ணயித்த விலையில் உரங்கள் கிடைத் திட மாவட்டத்தில் அனைத்து வட்டார அளவிலும் உள்ள உரக்கடைகளை கண்காணிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு குழு

இந்த குழுக்கள் இதுவரை 23 கடைகளை திடீர் ஆய்வு செய்துள்ளது. இதுதவிர மாவட்ட வேளாண்மை உதவி இயக்குனர் மற்றும் சம்பந்தப்பட்ட வட்டார வேளாண்மை உதவி இயக்கு னர் கள் உரக்கடைகளை ஆய்வு செய்துள்ளனர். ஆய்வின் போது காணப்பட்ட பொது வான குறைபாடுகளான கடை யில் இருப்பு உள்ள உரங்க ளின் விவரம் மற்றும் விலை விவரம் பலகை சரியாக பரா மரிக்கப்படாமல் இருந்தது. மேலும் உரங்கள் விற்பனை செய்யப்படும் போது விவசா யிகளிடம் கையெழுத்து பெறா மல் இருப்பது, இருப்பு பதி வேட்டில் உரங்க ளின் இருப்பு விவரத்தில் குறைபாடுகள் கண்டறியப்பட்டது.

நடப்பு ஆண்டில் 167 உர மாதிரிகள் ஆய்வுக்கு எடுத்து உரக்கட்டுப்பட்டு ஆய்வகத் திற்கு அனுப்பப்பட்டுள்ளது. மாவட்ட அளவில் உரக்கடை களை திடீர் ஆய்வு

செய்திட மாவட்ட அளவிலான குழுவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்த குழுவில் வேளாண்மை இணை இயக்குனர், துணை இயக்குனர், உதவி இயக்குனர் மற்றும் சம்பந்தப்பட்ட வட் டார வேளாண்மை உதவி இயக்குனர்கள் கொண்ட குழு வும் அமைக்கப்பட் டுள்ளது. இந்த தகவலை வேளாண்மை இணை இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார்.

**விவசாயிகளுக்கு நுண்ணுயிர் உரம் குறித்த பயிற்சி**



வறட்சியை தாங்கும் நுண்ணுயிர் உரம் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி அளிக்கப்பட்டபோது எடுத்தபடம்.

**ராஜபாளையம்** அருகே வறட்சியை தாங்கும் நுண்ணுயிர் உரம் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

நுண்ணுயிர் உரம்

ராஜபாளையம் அருகே தேவதானம் வேளாண்மை விதைப்பண்ணையில் விவசாயிகளுக்கு வறட்சியைத் தாங்கும் சிறந்த நுண்ணுயிர் உரம் மெத்தைலோ பாக்டிரியா தெளிப்பு செயல் விளக்கம் பயிற்சி நடந்தது.வேளாண்மை இணை இயக்குநர் சுப்பையா ஆலோசனையின் பேரில் இந்த பயிற்சி அளிக்கப் பட்டது. செயல் விளக்க நிகழ்ச்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் கிருஷ்ண மூர்த்தி மெத்தைலோ பாக்டிரியாவை பற்றி கூறியதாவது : -

இது விதை முளைப்புத் திறனை அதிகரிக்கச் செய்வதுடன் நாற்றுகளின் வீரியத்தையும், நெல் மணிகளின் எடையும் அதி கரிக்க செய்கிறது. செடிகளின்

இலைபரப்பு, வேர் மண்டலத்தின் உட்புறத்திலும் வாழ்கிறது. இது ஒரு இலைவழி திரவ நுண்ணுயிர் உரமாக பயன்படுகிறது.

வறட்சியை தாங்கும்

நெல் பயிர் 10 முதல் 15 நாட்கள் வரை வறட்சியைத் தாங்கும் தன்மையைப் பெற்று, இலை வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்யப் பயன்படுகிறது. பயிர் நன்கு வளர்ச்சி அடைவது மட்டுமல்லாமல் 10 சதவீத மகசூல் அதிகரிக்கிறது. யூரியாவை சிதைவடைய செய்து, இன்டோல் அசிட்டிக் அமிலம், சைட்டோகயனின், ஜிப்ரலிக் அமிலம் போன்ற வளர்ச்சி ஊக்கிகளை உற்பத்தி செய்கிறது. நெல், பருத்தி, தக்காளி, வெண்டை, கத்தரி போன்ற பயிர்களுக்கும் ஏற்றதாக உள்ளது.

நெற்பயிரில் இந்த பாக்டீரியா ஒரு ஏக்கருக்கு 200 மி.லி. போதுமானது. ரசாயன மற்றும் பூச்சிக் கொல்லிகளுடன் கலந்து தெளிக்க கூடாது. 1 லிட்டர் தண்ணீரில் 1 மில்லி கலந்து கைத்தெளிப்பானைக் கொண்டு தெளிக்க வேண்டும். கதிர் பிடிக்கும் பருவத்திற்கு முன் அதாவது நட்ட 65-70 நாட்களுக்குள் தெளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

மேலும் இந்த பாக்டிரியாவின் விலை கிலோவுக்கு ரூ.300 என விற்கப்படுகிறது. உரம் தேவைப்படும் விவசாயிகள் தமிழக வேளாண்மை பல்கலைக்கழக பேராசிரியர் சுந்தர் அவர்களை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம்.நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குனர் வன்னிய ராஜன், விதை சான்றளிப்பு துறை உதவி இயக்குனர் ராமமூர்த்தி, வேளாண்மை அலுவலர்கள் முனீஸ்வரன், தனலட்சுமி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தனியார் பால் மீண்டும் லிட்டருக்கு ரூ.2 உயர்வு: விலையைக் கட்டுப்படுத்த அரசுக்கு கோரிக்கை



கோப்புப்படம்.

தமிழ்நாட்டில் தனியார் பால் நிறுவனங்கள் பால் விலையை ஞாயிற்றுக்கிழமை மீண்டும் லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி உள்ளன. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பால் விலையை கட்டுப்படுத்த தமிழக அரசு முன்வரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தமிழகத்தில் உள்ள நான்கு முன்னணி தனியார் நிறுவனங்கள் (திருமலா, டோட்லா, ஹெரிடேஜ், ஜெர்சி) கடந்த மாதம் 20-ம் தேதி பால் விலையை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தின.

தனியார் பால் நிறுவனமான ஆரோக்கியா ஏற்கெனவே கடந்த மாதம் லிட்டருக்கு ரூ.2 உயர்த்தியது. தற்போது ஞாயிற்றுக்கிழமை முதல் மீண்டும் ரூ.2 உயர்த்தி உள்ளது. இதனையடுத்து மற்ற தனியார் நிறுவனங்களும் பால் விலையை மீண்டும் உயர்த்தக்கூடிய அபாயம் உள்ளது. பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்திய போதிலும், மக்களின் தேவையைக் கருத்தில் கொண்டு ஆவின் பால் விலையை உயர்த்தவில்லை.

ஆனால் பால் கொள்முதல் விலை மற்றும் பெட்ரோல், டீசல் விலை உயர்வை காரணம் காட்டி தனியார் நிறுவனங்கள் மாதத்திற்கு ஒரு முறை பால் விலையை போட்டி போட்டுக் கொண்டு உயர்த்தி வருகின்றன.

கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் 18ம் தேதி வரை ரூ.30 ஆக இருந்த ஒரு லிட்டர், 19ம் தேதி ரூ.2 உயர்ந்து ரூ.32 ஆக இருந்தது. பின்னர் இந்த ஆண்டு ஜனவரி மாதம் 20-ம் தேதி மேலும் ரூ.2 உயர்ந்து, ரூ.34 ஆக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. ஆரோக்கியா நிறுவனம் மட்டும் ஞாயிற்றுக்கிழமை லிட்டருக்கு ரூ.2 உயர்த்தி ரூ.36க்கு விற்பனை செய்கிறது.

இது குறித்து அடையாறு பகுதியில் வசித்து வரும் சூர்யா கூறுகையில், “தனியார் பால் பாக்கெட் நாள் ஒன்றுக்கு இரண்டு வாங்கினால் ரூ.38 செலவு செய்யவேண்டியுள்ளது. மாதம் ஒன்றுக்கு ரூ.1140 ஆகும். மாதம் 12 ஆயிரம் வருமானம் உள்ள எங்களை போன்ற குடும்பங்களுக்கு இது பெரிய செலவு தான்" என்றார்.

“பெட்ரோல் விலை போல் பாலின் விலையும் நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டு போகிறது. மக்களின் தேவையை கருத்தில் கொண்டு அரசு பால் விலையை கட்டுப்படுத்த வேண்டும்’’ என்று தனியார் நிறுவன ஊழியர் சம்பத் கூறினார்.

டீக்கடை உரிமையாளர் ஜோசப் கூறுகையில் “அனைத்து டீக்கடை களிலும் தனியார் பால் பாக்கெட்கள் தான் பயன்படுத்தப்படுகின்றன. தனியார் பால் விலை உயர்ந்து கொண்டே போவதால் டீக்கடை தொழில் நஷ்டத்தில் இயங்கி வருகிறது" என்றார்.

தமிழ்நாடு பால் முகவர்கள் நலச்சங்கத்தின் மாநிலத் தலைவர் எஸ். ஏ.பொன்னுசாமி கூறுகையில், “தனியார் நிறுவனங்களின் தன்னிச்சையான பால் விலை உயர்வை கட்டுப்படுத்த மக்கள் பிரதிநிதிகள், பால் முகவர்கள் சங்கம், பால் நிறுவனங்கள், ஐ.ஏ.எஸ். அதிகாரி அடங்கிய நால்வர் குழுவை அமைக்கத் தமிழக அரசு முன்வரவேண்டும்" என்றார்.

## விளைச்சல், வரத்து அதிகரிப்பு: காய்கறி விலை மலிவோ மலிவு



| சென்னையில் காய்கறிகளின் விலை நிலவரம் (1கிலோ-ரூபாயில்...) | | | | |
|---|---|---|---|---|
| காய்கறி பெயர் | கோயம்பேடு மார்க்கெட் | பண்ணை பசுமை கடை | சைதாப்பேட்டை - மேட்டுப்பாளையம் மார்க்கெட் | வில்லிவாக்கம் மார்க்கெட் |
| தக்காளி | 7 | 5 | 8 | 7 |
| வெங்காயம் | 15 | 18 | 15 | 15 |
| சாம்பார் வெங்காயம் | 30 | 30 | 50 | 25 |
| பச்சை மிளகாய் | 25 | 30 | 30 | 30 |
| கத்திரிக்காய் | 12 | 15 | 20 | 20 |
| உருளைக் கிழங்கு | 15 | 20 | 20 | 20 |
| அவரைக்காய் | 20 | 24 | 24 | 20 |
| வெண்டைக்காய் | 20 | 20 | 30 | 30 |
| முள்ளங்கி | 13 | 15 | 18 | 20 |
| பாகற்காய் | 20 | 20 | 30 | 30 |
| பீன்ஸ் | 20 | 20 | 28 | 30 |
| முட்டைக் கோஸ் | 10 | 15 | 16 | 15 |
| கேரட் | 15 | 30 | 24 | 25 |
| பீட்ரூட் | 10 | 25 | 10 | 20 |
| சவ்சவ் | 10 | 16 | 20 | 30 |
| புடலங்காய் | 15 | 15 | 20 | 25 |
| வெள்ளரிக்காய் | 16 | 15 | 20 | 20 |
| கோவைக்காய் | 20 | 16 | 20 | 30 |
| காலிபிளவர் | 15 | 15 | 15 | 15 |
| முருங்கைகாய்(1) | 7 | - | 7 | 7 |

வரத்து அதிகரிப்பால் சென்னை கோயம்பேடு சந்தையில் காய்கறிகள் விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.

தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து மட்டுமின்றி ஆந்திரா, மகாராஷ்டிரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து கோயம்பேடு சந்தைக்கு வரும் காய்கறிகள்தான் பெருமளவில் சென்னையின் காய்கறி தேவையை பூர்த்தி செய்கின்றன.

தற்போது காய்கறி வரத்து அதிகரித்திருப்பதால், விலை குறைந்துள்ளது. இதுகுறித்து கோயம்பேடு சந்தை காய்கறி வியாபாரிகள் சங்கங்களின் ஆலோசகர் வி.ஆர்.சவுந்தரராஜன் கூறியதாவது:

ஊட்டி, ஒட்டன்சத்திரம், தாராபுரம், உடுமலைபேட்டை, பெரம்பலூர், ஒசூர், திருவள்ளூர் உள்பட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து, தக்காளி, உருளைக்கிழங்கு, முட்டைக்கோஸ், கேரட், கத்திரிக்காய், சாம்பார் வெங்காயம், வெண்டைக்காய், முருங்கை காய் உள்ளிட்ட காய்கறிகள் தினமும் கோயம்பேடு சந்தைக்கு வருகின்றன.

ஆந்திரம், கர்நாடகம், மகாராஷ்டிரம் உள்ளிட்ட மாநிலங்களில் இருந்து வெங்காயம், பீன்ஸ், தக்காளி, உருளைக்கிழங்கு, கேரட், முட்டைக்கோஸ், கத்தரிக்காய், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகள் வருகின்றன.340 லாரிகளில் வருகிறதுதலா 15 டன் எடை கொண்ட 300 லாரிகள் தினமும் கோயம்பேடு சந்தைக்கு வந்தன. கடந்த ஆண்டில் பொழிந்த வடகிழக்கு பருவமழை, காய்கறி விளைச்சலுக்கு சாதகமாக அமைந்தது.

இதனால், விளைச்சல் அதிகரித்தது. கடந்த நவம்பரில் இருந்து கோயம்பேடு சந்தைக்கு வரும் காய்கறி லாரிகளின் எண்ணிக்கையும் படிப்படியாக உயர்ந்தது. ஜனவரி 15 முதல் தினமும் 340 லாரிகள் வருகின்றன. இதனால், கோயம்பேடு சந்தையில் காய்கறிகள் விலை மிக கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது.பெரிய வெங்காயம் 3 மாதங்களுக்கு முன்பு சில்லறை விலையில் கிலோ ரூ.100-க்கு விற்கப்பட்டது. தற்போது விலை ரூ.15 முதல் 20 வரை விற்கப்படுகிறது. ரூ.25-க்கு விற்ற கத்திரிக்காய் ரூ.10 முதல் ரூ.12 வரையும், ரூ.35-க்கு விற்ற அவரைக்காய்

ரூ.20 முதல் ரூ.25 வரையும், ரூ.40-க்கு விற்ற தக்காளி ரூ.7-க்கும் சில்லறை விலையில் விற்கப்படுகின்றன.

**மார்ச் வரை நீடிக்கும்**

முட்டைக்கோஸ் கிலோ ரூ.10, முள்ளங்கி ரூ.13, கேரட் ரூ.15, நூக்கல் ரூ.10, பீட்ருட் ரூ.10, சவ்சவ் ரூ.10 என மற்ற காய்கறிகளின் விலையும் மிகமிக குறைந்துள்ளன. காய்கறி விலை நிலவரம் மார்ச் வரை இப்படித்தான் இருக்கும்.

இவ்வாறு வி.ஆர்.சவுந்தரராஜன் தெரிவித்தார்.

**தேங்காய் விலை அதிகரிப்பு**

வரத்து குறைவு காரணமாக கோயம்பேடு சந்தையில் தேங்காய் விலை கணிசமாக அதிகரித்துள்ளது. இதுகுறித்து தேங்காய் மொத்த வியாபாரி அயப்பராஜ் கூறியதாவது:கோயம்பேட்டுக்கு பொள்ளாச்சி, பட்டுக்கோட்டை, பேராவூரணி, மைசூர் உள்ளிட்ட பகுதி

களில் இருந்து தேங்காய்கள் வருகின்றன. பனிக்காலம் என்பதால் தேங்காய் விளைச்சல் குறைந்துள்ளது. வழக்கமாக 50 லாரிகளில் வரும் தேங்காய் தற்போது 20 லாரிகளில்தான் வருகிறது. இதனால், தேங்காய் விலை கணிசமாக அதிகரித்துள்ளது.

மொத்த விலையில் ஒரு தேங்காய் ரூ.16, ரூ.18, ரூ.20, ரூ.25 என அளவுக்கேற்ப விற்கப்படுகிறது. 600 கிராம் எடையுள்ள நடுத்தர அளவு கொண்ட தேங்காய் ரூ.18-க்கும் பெரிய தேங்காய் ரூ.25-க்கும் விற்கப்படுகின்றன.

## நாமக்கல்: சேந்தமங்கலத்தில் கேரட், பீட்ரூட் இயற்கை உரம் மூலம் விளைச்சல்



குளிர் பிரதேசங்களில் விளையும் கேரட், பீட்ரூட் உள்ளிட்ட காய்கறிகளை சேந்தமங்கலத்தில் விளைவித்து ஒரு விவசாயி சாதனை படைத்துள்ளார். இயற்கை உரத்தை மட்டுமே முழுமையாகப் பயன்படுத்துவதால், இவரது விளை பொருட்களுக்கு மக்களிடம் அதிக வரவேற்பு உள்ளது.

**குளிர் பிரதேச பயிர்கள்**

கேரட், பீட்ரூட், காலிஃப்பிளவர் ஆகியவை ஓசூர், பெங்களூரு போன்ற குளிர் அதிகமுள்ள பகுதிகளில் விளையும் பயிர்கள். மற்ற பகுதிகளில் கத்திரி, வெண்டை காய்கறிகள் மட்டுமே விளையும். இந்த நிலையில், நாமக்கல்

மாவட்டம் சேந்தமங்கலம் அருகேயுள்ள பச்சுடையாம்பட்டி புதூர் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி சிவக்குமார், குளிர் பிரதேசங்களில் விளையும் கேரட், பீட்ரூட், காலிஃப்பிளவர் உள்ளிட்ட காய்கறிகளை விளைவித்து சாதனை படைத்துள்ளார். இயற்கை உரங்களை மட்டும் பயன்படுத்தி, இவற்றை சாகுபடி செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இதுகுறித்து விவசாயி சிவக்குமார் கூறியது:

இரு தலைமுறைகளாக விவசாயத்தில் ஈடுபட்டு வருகிறோம். காலச் சூழலுக்கு ஏற்ப விவசாயம் செய்வதில் எனது தந்தை ராமசாமி ஆர்வம்காட்டி வந்தார். அதன்படி, எங்களுக்கு சொந்தமான நிலத்தில் கேரட் உள்ளிட்ட காய்கறிகளைப் பயிரிடத் தொடங்கினோம். ஊட்டி, கொடைக்கானல், ஓசூர், பெங்களூர் பகுதிகளில் விளையும் கேரட், பீட்ரூட், காலிஃப்ளவர் ஆகியவற்றைப் பயிரிட்டோம்.

## 20 ஆண்டாக சாகுபடி

இந்தப் பயிர்கள் ஓசூர், பெங்களூரு உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டு முழுவதும் விளையும். அதற்கேற்ற குளிர் சீசன் அங்கு நிலவும். நாங்கள் குளிர் காலத்தில் இந்தப் பயிர்களை விளைவித்தோம். நல்ல விளைச்சல் கிடைத்தது. கடந்த 20 ஆண்டுகளாக குளிர் சீசன் சமயத்தில் இவற்றைப் பயிரிட்டு வருகிறோம். மற்ற மாதங்களில் கீரை உள்ளிட்ட வேறு பயிர்களை சாகுபடி செய்வோம்.

நாங்கள் விவசாயம் தொடர்பாக கல்வி பயிலவில்லை.

தந்தையிடம் கற்ற அனுபவப் பாடம் மூலமே பயிர் சாகுபடி செய்து வருகிறோம். நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தைச் சேர்ந்தவர்கள் அவ்வப்போது வந்து, கேரட், பீட்ரூட் விளைச்சலைப் பார்வையிடுவர். பயிர் விளைச்சலுக்கு செயற்கை உரத்தைப் பயன்படுத்துவதில்லை. மாட்டுச் சாணம் உள்ளிட்ட இயற்கை உரங்களை மட்டுமே பயன்படுத்துகிறோம்.இங்கு விளைவிக்கப்படும் கேரட், பீட்ரூட் ஆகியவை உள்ளூர் சந்தைகளில் விற்பனை செய்யப்படும். இயற்கை உரத்தைப் பயன்படுத்துவதால், மக்களும் ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர், என்றார். பொதுவாக கேரட், பீட்ரூட், காலிஃப்ளவர் போன்ற பயிர்கள் வளர மிகவும் குளிர்ந்த சூழலும், அதிக வெப்பமில்லாத நிலப்பகுதியும் அவசியம். சமவெளியில் இதற்கு சாத்தியமில்லை. ஆனால், சமவெளியில் இவற்றை சாகுபடி செய்தது வியப்புக்குரியது. விவசாயம் நலிவடைந்து வரும் சூழலில், காலத்திற்கேற்ற பயிர்களைச் சாகுபடி செய்யும் விவசாயத்துக்கு மக்கள்ஆதரவு அதிகரித்துள்ளது.